# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ்:3 • 09.12.2018

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com


## சர்வதேச மனித உரிமைகள் தினம் : டிசம்பர் 10



## இலங்கையில் மனித உரிமை உள்ளதா? எங்களுக்குத் தெரியாது!

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவர் பேட்டி



## தமிழ் அரசியல் கைதிகள் குறித்து தெளிவான நிலைப்பாடு எதுவும் அரசியல்வாதிகளிடம் இல்லை

அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல்


## நாங்கள் கண்ணீருடன் படுத்து கண்ணீருடன் எழும்புகின்றோம்

முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் பேட்டி



## சர்வதேச மனித உரிமைகள் தினம் தமிழ் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுமா?

செங்கோடகன்



## மக்கள் போராட்டத்தால் திணறும் பிரான்ஸ்

# சர்வதேச மனிதஉரிமைகள் நாளில் நீதிவேண்டி தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் போராட்டம்!

1948 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசத்தின் மனித உரிமைகள் நாள் டிசம்பர் 10 ஆம் நாள் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

இந்த நாளினை தாயகத்தில் உள்ள மக்கள் தமது உரிமைகளை வலியுறுத்தி ஆண்டுதோறும் பல்வேறு வழிகளில் சாத்வீகரீதியான போராட்டங்களில் முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில் நாளை வடக்கு கிழக்கு மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தர வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் பிரச்சனையிலும் அரசியல் கைதிகளின் விடுதலையிலும் இலங்கை அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பு செய்து வருவதால் காணாமல் போனோரின் குடும்பங்களும் சிவில் அமைப்புக்களுடன் அண்மைக் காலமாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி திறந்து வைத்த இரணைமடு குளம் இளைஞனை பலியெடுத்தது



கிளிநொச்சி இரணைமடுவின் வான்பகுதிக்குள் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த 21 வயதுடைய என். டிலக்சன் எனும் மாணவன் பலியாகியுள்ளார். இன்று(09) மாலை 4.30 மணியளவில் இரணைமடுவின் வான் கதவு நான்கு திறக்கப்பட்டிருந்து. இதில் இடது பக்கம் இரண்டு கதவுகளும், வலது பக்கம் இரண்டு கதவுகளும் திறக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பகுதிக்குள் பெருமளவான பொது மக்கள் குழுமியிருந்தனர். இதில் சில இளைஞர்கள் குறித்த பகுதியின் ஆழமான பகுதிக்குள் இறங்கி குளித்துக்கொடிண்டிருந்தனர்.

இதன் போது யாழ்ப்பாணம் சாவக்கச்சேரி பகுதியிலிருந்து நண்பர்களுடன் இரணைமடுவை பார்க்க வந்திருந்த இளைஞர் ஒருவர் குளிப்பதற்கு இறங்கிய போது நீரில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்தார். இந்த நிலையில் அவருடன் வருகை தந்த நண்பர்கள் அழுதவாறு காணப்பட சம்பவ இடத்தில் நின்ற ஊடகவியலாளர் உடனடியாக கிளிநொச்சி பிரதி பொலீஸ் மா அதிபர், கிளிநொச்சி படைகளின் தலைமையகம், போன்றோருக்கு உடனடியாக அறிவித்தபோதும் முப்பது நிமிடங்களுக்கு பின்னரே பொலீஸ் மற்றும் படையினர் வருகை தந்தனர். இதற்கிடையில் ஒரு பகுதியில் திறக்கப்பட்டிருந்த வான்கதவுகள் மூடப்பட்டு சில இளைஞர்கள் நீரில் இறங்கி தேடுதலை மேற்கொண்டு ஒரு மணித்தியாலயத்திற்கு பின்னர் உடலை மீட்டனர். இரணைமடுகுளம் அபிவிருத்திக்கு பின் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன அவர்களினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# தமிழ்மக்கள் பேரவையின் கூட்டத்தில் கஜேந்திரகுமார் சித்தார்த்தன் பங்கேற்கவில்லை

இன்று தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் நிதியரசர் விக்கினேஸ்வரன் அவர்களும் பேரவையில் அங்கம் வகிக்கும் சிவில் அமைப்பின் தலைவர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்ட நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் உள்ளிடோர் கலந்துகொள்ளவில்லை. தமிழ்மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் தீர்வுகாண வேண்டுமென்று கருத்தின் அடிப்படையிலும் கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டதாக கூட்டத்தில் பங்கேற்ற சிவில் அமைப்பின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். இதனிடையே முதலமைச்சருக்கென அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களை வெளியே கசியவிடப்பட்டமை தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டதோடு தமிழ் மக்கள் பேரவையின் பேரவையில் எழுந்துள்ள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு மூன்று பேர் கொண்ட குழுவொன்றை அமைக்க வேண்டுமென்ற என்ற கருத்தும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் குழு அமைக்கப்படாமல் கூட்டம் முடிவடைந்ததாக பேரவைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வவுணதீவுச் சம்பவமும்.. முன்னாள் போராளிகளின் எதிர்காலமும்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு பொலிஸ் சோதனைச் சாவடி மீதான தாக்குதலையடுத்து மீண்டும் முன்னாள் போராளிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்பின் பல இடங்களிலும் பாதுகாப்புச் சோதனைகள் இடம்பெற்றுள்ளன. பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் இணைந்து இந்த சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர். மட்டக்களப்பிலும் கிளிநொச்சியிலுமாக இரண்டு முன்னாள் போராளிகள் கைதாகியுள்ளனர். வவுணதீவுத் தாக்குதல்களுக்கு இவர்கள்தான் காரணம் என விசாரணைகள் ஆரம்பிக்கப்பட முன்னரே செய்திகள் வெளியிடப்படுகின்றன.

அவசரமாக வெளியிடப்படும் இதுபோன்ற செய்திகளும், முன்னாள் போராளிகள் இலக்கு வைக்கப்பட்டு திடீர் திடீரென அவர்களுடைய வீடுகளும் காணிகளும் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்படுவதும் கிழக்கு மாகாணத்தில் அச்ச நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. பகல்வேளைகளில் மட்டுமன்றி இரவு நேரங்களிலும் இவ்வாறாக இடம்பெறும் திடீர்ச் சோதனைகள் மக்களுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. விசேட புலனாய்வுப் பிரிவினர், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகள் போர்க்கால நிலைமையை மீண்டும் உருவாக்குவதாக இருக்கின்றது. போதாக்குறைக்கு, இராணுவம் மீண்டும் வீதியில் இறங்கும் நிலை ஏற்படலாம் என இராணுவ அதிகாரி ஒருவர் அச்சுறுத்தியிருக்கின்றார்.

வடக்கு கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள் அனைத்துக்கும் எடுத்தவுடன் முன்னாள் போராளிகள் மீது சுட்டுவிரலை நீட்டுவது வழமையாகிவிட்டது. வவுணதீவில் இடம்பெற்றது ஒரு திட்டமிட்ட சம்பவமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. கொழும்பு அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களின் மத்தியில் முன்னாள் போராளிகளையும், அரசியல் கைதிகளையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதற்கு அரசியல் அபிலாசைகளைக் கொண்டுள்ள ஒரு தரப்பினர் முற்பட்டிருந்தமை இரகசியமானதல்ல. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படக்கூடாது எனக் குரல்கொடுத்த மகிந்த தரப்பினரே சில வாரங்களுக்கு முன்னர் அரசியல் கைதிகளுக்காக நீலிக் கண்ணீர்வடித்ததைப் பார்த்தோம்.

திடீர்ப் பிரதமரான மகிந்தவுக்கு கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காக விலைபோன தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை கையிலெடுத்தார்கள். அவர்கள் சிறைகளுக்கும் சென்று கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சொன்னார்கள். கைதிகள் மூலமாக கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுப்பதும், தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதும்தான் அவர்களுடைய இலக்கு. இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதுதான் வவுணதீவு பொலிஸ் காவலரண் தாக்கப்பட்டு இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் கைதிகளின் விடுதலையைத் தடுப்பதற்காகவும், முன்னாள் போராளிகளை அச்சத்தில் வைத்திருப்பதற்காகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட ஒரு சம்பவமாக இருக்க வேண்டும் என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. முன்னாள் போராளிகள் தமது வாழ்வாதாரத்துக்காகவும், தமது குடும்பங்களைப் பாதுகாப்பதற்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் யதார்த்தம். இது அனைவருக்கும் தெரியும். அங்காங்கே சிறுசிறு தாக்குதல்களை நடத்துவதன்மூலமாக அவர்கள் எதனையும் சாதித்துவிடப்போவதில்லை. ஆக, பாதுகாப்புப் படைகளைத் தொடர்ந்தும் ஆக்கிரமிப்புப் படைளாக தமிழர் தாயகப் பகுதிகளில் வைத்திருப்பதற்கும், அரசியல் கைதிகளின் விடுதலையைத் தடுப்பதற்காகவும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட சம்பவமாக வவுணதீவுத் தாக்குதல் சம்பவம் இருக்கின்றது என்பதே எமது கருத்து. இவ்வான நிலையில் முன்னாள் போராளிகளின் பாதுகாப்பைச் சர்வதேச சமூகமே உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக தமிழ் மக்களும், அமைப்புக்களும் குரல் கொடுப்பது அவசியம்!

**- ஆசிரியர்**

# நாங்கள் கண்ணீருடன் படுத்து கண்ணீருடன் எழும்புகின்றோம்

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இணைப்பாளரான மரியசுரேஸ் ஈஸ்வரி இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு பேட்டி.**

**தாயகத்திலே காணாமல் போன உறவுகளை மீட்பதற்கான புனிதப் போரில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாங்கள் தொடர்ந்து பங்கெடுத்து வருகிறீர்கள், காணாமல் போனோர் பிரச்சனையில் தாங்கள் ஆர்வம் காட்டுவதற்கு காரணம்?**

நான் இதற்குள் வரவேண்டிய காரணம் 2009 ஆம் ஆண்டு 3ம் மாதம் 18ந் தேதி எனது கணவர் முல்லைத்தீவு கடலில் வைத்து கடற்படை யினரால் கைதுசெய்து விடுதலைப் புலிகள் என்று அடையாளம் காட்டப்பட்டு செஞ்சிலுவை சங்கத்தினால் அறிவிக்கப்பட்டு பதிவில் உள்ளார்.

என்னுடைய கணவர் பிடிபடும்போது என்னுடைய 03 மாத கைக்குளந்தை மற்றும் ஒருமகனுக்கு 04 அகவை மற்றமகனுக்கு 07 அகவை, இந்த நிலமையில் நானும் முள்ளிவாய்க்கால் பொக்கணையில் எறிகணைத்தாக்குதலில் காயமடைந்து அந்த காயத்துடன் தப்பி புல்மோட்டை முகாமிற்கு சென்று அங்கிருந்து எனது கணவரை தேடி அங்கு பொலீசாரிடமும் ஐ.சி.ஆர்சி, மனித உரிமை ஆணைக்குழு எல்லாரிடமும் சொல்லியும் சரியான பதில் கிடைக்கவில்லை கடற்படையினர் கைதுசெய்துள்ளதை ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டோம். ஆனால் கடற்படையினர் கைது செய்தநாள் 18.03.2009 அன்று ஆனால் 23.03.2009 அன்று வானொலி மற்றும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளன வலம்புரி பத்திரிகையில் வெளியான செய்தி வெளியில் தேடி இப்பவும் எடுத்து வைத்திருக்கின்றேன். மாத்தளன் பகுதியில் கப்பலில் ஆட்களை ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஐ.சி.ஆர்.சியிடம் நான் அன்று தெரியப்படுத்தியுள்ளேன். ஆனால் ஐ.சி.ஆர்.சியிடம் கேட்டபோது அவர்கள் தகவல் மாறிக்கொடுத்துவிட்டதாக தெரிவித்துவிட்டு இதுவரை எந்த பதிலும் கொடுக்கவில்லை. அதன் பின்னர் முகாமில் இருந்து பல துன்பங்கள் துயரங்களை அனுபவித்து 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டேன்.

எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் எனது பிள்ளைகளை அயல் வீட்டாருடன் விட்டுவிட்டு ஆறாயிரம் ரூபா சம்பளத்திற்கு சாப்பட்டுக்கடைக்கு வேலைக்கு சென்றேன். கடையில் வேலை செய்து என் பிள்ளைகளின் உணவிற்கும் கல்விக்குமாக பாடுபட்டு வந்த காலத்தில் தொடர்ந்து காணாமல் போனவர்களை தேடும் போராட்டங்கள் இடம்பெறும். அதற்கும் சென்று எனது கணவரையும் தேடிகண்டு பிடிக்கவேண்டும் என்ற மன ஆதங்கத்துடன் செல்வேன் அந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டது. இந்த போராட்டத்திற்கு ஒரு தலைமை வேணும் என்று அதனை கருத்தில் கொண்டு இந்தப்போராட்டம் இவ்வளவு காலம் நீடிக்கும் என்று நான் இதற்குள் வரவில்லை குறிப்பட்ட ஒரு ஆறு மாத்திற்குள் என் கணவரை விட்டுவிடுவார்கள் என்று நினைத்து வந்தேன். ஆனால் இன்று இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் முழு வீச்சுடன் எங்கள் உரிமையினை உலக



**முல்லைத்தீவு மாவட்டத்தில் 1500 காணாமல் போன குடும்பங்கள் இருக்கின்றார்கள்.**

நாடுகள் வரையும் கோரி நிக்கின்றோம். இன்றுவரை என்னைப் போன்ற பல பெண்கள் கண்ணீருடன் படுத்து கண்ணீருடன் எழும்புகின்றோம்

**இங்குபோராட்டம் நடத்திக்கொண்டு எவ்வாறு உங்கள் குடும்பத்தை பாக்கின்றீர்கள்?**

போராட்டத்திற்குவரும்போது நான் சம்பளத்திற்கு வேலை செய்து கொண்டு இருந்தேன் போராட்டத்தில் முழுமையாக என்னை அர்பணித் தபோது என்து கணவரை மீட்க்கும் வரை எனது குடும்பத்தை பெரியப்பாவிடம் பார்க்க கேட்டேன் அவரிடம் தான் நான் இப்போது கையேந்தி நிக்கின்றேன் இந்த போராட்டம் முடியும் மட்டும் என்னையம் எனது பிள்ளைகளையும் நீங்கள்தான் காப்பாற்றவேண்டும் என்ற இரங்கலில் அவரை நம்பியே எனது குடும்பம் வாழ்ந்துவருகின்றது. இவ்வாறு என்னைபோல் பலகுடும்பங்கள் எதுவித உதவிகளும் அற்ற நிலையில் கூட கூலிவேலை செய்து வாழ்ந்துவருகின்றார்கள்.எனது பிள்ளைகளுக்காக அரசாங்கத்திடம் சென்று உதவி கேட்டுக் கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம் இந்த போராட்டத்தில் நான் இணைந்ததன் பின்னர் அரச அதிகாரிகளும் எனக்கு உதவி செய்வதற்கு முன்வருவதில்லை எங்களை புறக்கணிக்கின்றார்கள். போராட்டத்தை விட்டு வெளியில் செல்லமுடியாத நிலை அதில் ஒருபயம் இதில் ஏதாவது இலாபத் தினை பெற்றுவிட்டு வெளியில் சென்று விட்டார்கள் என்று கூறுவார்கள் என்ற பயமும் அதனை விட எனது கணவர் கிடைக்காமல் போய்விடுவாரோ என்ற ஏக்கத்திலும்தான் வாழ்ந்து வருகின்றேன்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் எவ்வளவு பேர் உள்ளார்கள் அது தொடர்பில் எந்த தெந்த திணைக்களங்கள் நிறுவனங்களிடம் தெரிவித்துள்ளீர்கள்?**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1500 காணாமல் போன குடும்பங்கள் இருக்கின்றார்கள். அதில் பதிவில் உள்ளவர்கள் 700 வரையானவர்களே உள்ளது. அதனைவிட குடும்பங்களாக சரணடைந்தவர்களின் பதிவுகள் எங்களிடம் இல்லை. சிலவீடுகளில் நான்கு பிள்ளைகள், இரண்டு பிள்ளைகள், ஒருபிள்ளை என்று காணமல்போயுள்ளளார்கள்.இதில் யாரிடமும் சரியான தரவு இல்லை நாங்கள் எடுத்த தரவுகளை யூ.என் க்கு கொடுத்து ள்ளோம், ஐ.சி.ஆர்.சி, மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்டவர்களிடம் கொடுத்துள்ளோம். எங்கள் பிரச்சனை தொடர்பில் யூ.என் உடன்தான் தொடர்ச்சியாக கதைத்துக் கொண்டிருக்கின்றோம் சர்வதேசம் தான் எங்களுக்கு தீர்வினை தரவேண்டும்.

**போராட்டத்திற்கு வரும் அம்மாக்கள் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு?**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமை கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களை சேர்ந்தபிள்ளைகளே நாட்டிற்காக போராட் சென்றார்கள் அவர்களே இறுதிப்போரின் போது காணாமல் ஆக்கப்பட்டார்கள் அந்த குடும்பங்கள் இன்றும் வறுமையினை தாங்கிய குடும்பங்களாக அடுத்தவர் கையினை எதிர்பார்த்த குடும்பங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள் இந்த போராட்ட கொட்டகைக்கு வருவதுகூட பெரிய செலவாக காணப்படுகின்றது. தங்கள் பிள்ளைகள் படையினரிடம் இருக்கின்றனர். நாங்கள் தொடர்ச்சியாக போராடினால் தான் எங்கள் பிள்ளைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றார்கள்.

**தற்பேதைய அரசியல் நிலையில் உங்கள் நிலை என்ன?**

தற்போதைய அரசியல் நிலையில் அரசாங்கத்தில் எங்களுக்கு எந்த நம்பிக்கையும்

தொடர்ச்சி 6ம் பக்கம்...

# இலவச சீருடைகள் வழங்கப்படவில்லை : கிளிநொச்சியில் சுவரொட்டி

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை துணிகள் வழங்கப்படா மையினால் கிளிநொச்சியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 81 பாடசாலைகளில் சுமார் 32755 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் அரை வாசிக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்கள். இவர்கள் ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலவச சீருடைத்துணிகளை நம்பியே இருக்கின்றனர். இந்த நிலையில் இவ்வருடத் திற்கான இலவச சீருடைத்துணிகள் வழங்கப்படாமையினால் புதிய சீருடைகளை தைத்துக்கொள்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். வழமையாக இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டாலும் பெரும்பாலான மாணவர்கள் புதிய சீருடைகளை தைத்துக்கொள்வதற்று கூட பணம் இன்றி சிரமப்படுகின்ற நிலையில் இவ்வருடம் இதுவரைக்கும் சீருடைத்துணிகளே வழங்கப்படவில்லை எப்போது வழங்க்கப்படும் என்றும் எந்தவிதமான தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என கல்வித்திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் இலவச சீருடை வழங்க்கப்படாமைக்கு எதிரிப்புத் தெரிவித்து கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.



# இலங்கையில் மனித உரிமை உள்ளதா? எங்களுக்குத் தெரியாது

**தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்ற கேள்விகளோடு காணாமல் போனவர்களை மீட்க வேண்டும் என்ற ஏக்கத்துடன் நீங்கள் வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அண்மையில் ஜெனிவா வரை சென்று குரல் கொடுத்துள்ளீர்கள். நீங்கள் இந்தப் போராட்டக் களத்துக்கு வந்ததற்கான காரணம் என்ன?**

நானும் இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு கண்ணீர் வடிக்கும் பல நூற்றுக்கணக்கான தாய்மார்களில் ஒருத்தி. எனது மகன் ஒருவரும்

**கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி, 'இலக்கு' மின்னிதழுக்கு கண்ணீர் மல்க வழங்கிய பேட்டி!**

இறுதி யுத்தத்தின் பின் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். அதற்கான ஆதாரம் அனைத்தும் என்னிடம் உள்ளது. நான் இறப்பதற்கு முன் எனது பிள்ளையுடன் ஓர் நாளாவது வாழவேண்டும் என்ற ஆசையுடன் வீதிக்கு இறங்கினேன். என்போன்ற பல உறவுகள் என்னுடன் சேர்ந்து இறங்கினார்கள் அவ்வாறே எமது உறவுகளை தேடுவதற்கான போராட்டம் தொடர்கிறது எனது மகனைத் தேடுவதற்கான போராட்டத்தில் அண்மையில் கணவனையும் தொலைத்துவிட்டேன் அண்மையில் நோய்வாய்ப் பட்டு அவரும் இறந்துவிட்டார் (எனக் கூறியவாறு அழத் தொடங்கிவிட்டார்)

**காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களின் போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளது எவ்வளவு காலம் இப்போராட்டங்கள் தொடரும்?**

காணாமல் ஆக்கப்பட்ட, கையளிக்கப்பட்ட எங்களுடைய உறவுகள் எங்களுடைய கைக்கு வரும் வரை போராட்ட வடிவங்களை மாற்றி எமது போராட்டம் தொடரும். எமது நோக்கம் மறைமுகமான தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளை மீட்பதே. அது எவ்வளவு காலம் எனச் சொல்ல முடியாது. அவர்களை எமது கைகளுக்கு தரும் வரை இப்போராட்டங்கள் தொடரும்.

**கிளிநொச்சியில் எத்தனை பேர் காணாமல் ஆக்கப் பட்டுள்ளார்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலைமை எவ்வாறு உள்ளது?**

நாங்கள் வீதியில் இறங்கி போராட்டத்தை ஆரம்பித்தபின் ஆயிரத்துமுந்நூறுகுடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமல் போனவர்களது பதிவுகளைத் தந்திருக்கிறார்கள். இன்னமும் பதிவுகளைத் தராமல் பலர் இருப்பதாகவும் அறிய முடிகிறது. பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின் கீழும் உழைக்கின்ற பிள்ளைகளையும் கையளித்து தனிமையிலும் பல துன்பங்களை அனுபவித்த வாறு வாழ்ந்து வருகின்றனர். இருந்தபோதும் அவர்கள் எவ்வித வாழ்வாதாரத்தினையோ பணத்தினையோ எதிர்பார்க்காது தமது உறவுகளை எதிர்ப்பார்த்தே காத்திருகின்றனர். அனைவருடைய எதிர்பார்ப்பும் வாழ் வாதாரத்தை நம்பியதாக இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை நோக்கியதே இதனை நாங்கள் பல இடங்களில் ஆணித் தரமாக கூறியும் உள்ளோம். அதனை விட இப்போராட்டங்ககளில் தமது உறவுகளை, பிள்ளைகளைத் தேடிய பெற்றோர் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 17 பேர் இறந்துள்ளனர்.

**காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறி வதற்காக அமைக்கப்பட்ட ஓஎம்பி அலுவலகத்தை ஏன் நிராகரிகிறீர்கள்? அவ்வாறாயின் உங்கள் கோரிக்கை என்ன?**

ஓ எம்பி அலுவலகத்தைப் பொறுத்தவரை மக்களால் முன்மொழியப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படாது. மக்கள் கருத்துகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. வெறுமனவே ஓர் அலுவலகமாக மட்டுமே அது உள்ளது. அவர்களால் முன்மொழியப் பட்ட நான்கு பொறிமுறைகள்கூட அதில் உள்ளடக்கப்படாமையால் பாதிக்கப்பட்ட தரப்பு என்ற வகையில் அவர்கள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. அதைவிட அதி உச்ச ஜனாதிபதியால் எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டாத நிலையில் ஓ எம் பி அலுவலத்தால் எமக்கு

**எமது பிரச்சனையில் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருந்தால் நாங்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டியிருக்காது.**

எவ்வாறு தீர்வு கிடைக்கும் என்பதால் சர்வதேசம் எமது பிரச்சனைகளில் தலையிட்டு நீதியை வழங்க வேண்டும் என்பதுவே எங்கள் அனைவரது எதிர்பார்ப்பாகும்.

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இல்லை என ஜனாதிபதியும் பிரதமரும் சொல்லியிருகிறார்கள் இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இறுதி யுத்தத்தின் போது ஜனாதிபதி பாது காப்பு செயலாளராக இருந்துள்ளார் அவர் எங்களுக்கான பதிலைக் கூற வேண் டிய கடமையும் பொறுப்பும் உள்ளது. பிரதமர் அவ்வாறு கூற முடியாது அவர் பிரதமராக பதவி ஏற்கு முன்னர் கிளிநொச்சி வரும் போது, எங்களைச் சந்தித்து உங்க ளுடைய பிள்ளைகள் மறைமுகமான தடுப்பு முகாமில் இருக்கிறார்கள். மகிந்த ராஜபக்ச





அரசு இதனை செய்திருக்கிறது. தான் பதவிக்கு வந்தால் அவர்களை மீட்டுத் தருவேன் என கூறினார் ஆகவே இவர்கள் இருவரும் எம்மை தட்டிக் கழிக்க முடியாது. இவர்கள் இருவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்களே.

**காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுவதற்கான போராட்டத்திற்கு தமிழ் அரசியல் தலைமைகளின் பங்கு எவ்வாறு உள்ளது?**

நாடே குழம்பிப் போய் இருக்கும் நிலையில் அவர்களுடைய பங்கு திருப்திகரமானதாக இருக்கும் என சொல்லமுடியாது. ஆனாலும் அவர்கள் முன்னைய காலப் பகுதியில் அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்று சேர்ந்து எங்கள் போராட்டத்திற்கு கை கொடுத்து பாராளுமன்றத்தில் ஒருமித்த குரலாக அனைவரும் குரல் கொடுத்திருந்தால் எங்களுக்கு இன்னமும் வீதியில் இருக்க வேண்டிய நிலை வந்திருக்காது. இதற்கான பதிலை அரசு எப்போதே கூறி இருக்கும். அவர்களுடைய பங்குகள் இருந்தாலும் முழுமையானதாக இல்லை.

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குகின்றார்கள் இதனைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ஒவ்வொருவரும் தமது ஆசனங்ளையும் பதவிகளையும் தக்கவைத்துக் கொண்டுதான் உள்ளார்கள் இவர்களை நம்பி எவ்வித பிரயோசனமும் எட்டப் போவதில்லை. அவர் களது பங்களிப்புகள் எமது போராட்டத்தை பொறுத்தவரை போதாது. ஆகவே பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆகிய நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்துதான் எமது உறவுகளை மீட்க முடியும் என நம்புகின்றோம்

**இப்போது சர்வதேசம் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

இலங்கை அரசின் ஊடாக நீதி கிடைக்காத எமக்கு சர்வதேசம் எமது பிரச்சனைகளை கையில் எடுத்து கால இழுத்தடிப்புக்களை தவிர்த்து இலங்கை அரசுக்கு கால அவகாசங்களை வழங்காது எதிர்வரும் மார்ச் மாதமாவது காணாமல் போனோர் பிரச்சனையில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

**இலங்கை அரசின் மனித உரிமைகளைப் பின்பற்றுவது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள் ?**

இலங்கையில் மனித உரிமை உள்ளதா? எனக்கு தெரியாது. மனித உரிமை தினம் என்று நாங்கள் கத்துகின்றோம், கதறுகின்றோம் மனித உரிமையை பேணச் சொல்லி. ஆனாலும் கடத்தல், காணாமல் போதல், கற்பழிப்பு என்று அந்த வரிசை நீண்டுகொண்டேதான் இன்னும் செல்கிறது.

# பிரதமர் பதவியை மீளப்பெற ரணிலின் இறுதி ஆயுதம்...

## பூமிகன்

கொழும்பில் அரசியல் களம் சூடுபிடித் திருந்தாலும், நீதிமன்றத் தீர்ப்பிலேயே அடுத்த கட்ட நகர்வுகள் தங்கியிருக்கின்றது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந் திருக்கின்றது. இதன் மீதான தீர்ப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை பாராளுமன்றக் கலைப்புக்கு எதிரான இடைக்காலத் தடை தொடரும்.

இந்தப் பின்னணியில், இரண்டு நகர்வுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. இப்போது தயாராக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. முதலாவது "புதிய" பிரதமரைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்வதா என்பது. இரண்டாவது, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கக் கோரும் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவது. இதற்கான முன்னறிவித்தல் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த "நம்பிக்கைப் பிரேரணை" எதிர்வரும் 12 ஆம் திகதி கொண்டுவரப்படும்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகச் செயற் படுவதற்குத் தடை விதித்து திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஐ.தே.க.வுக்கும் அதனுடன் இணைந்திருக்கும் கட்சிகளுக்கும் பெருமளவு உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. ஆனாலும், ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக இருப்பதுதான் மாற்றுத் திட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஐ.தே.க.வுக்கு ஏற்பட்டது. "225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு ரணிலை பிரதமராக்க வேண்டும் எனக் கோரினால்கூட, நான் அதனைச் செய்யப்போவதில்லை" என மைத்திரி உடும்புப்பிடியாக இருப்பது நிலைமைகளைச் சிக்கலாக்கியுள்ளது.

மகிந்தவின் அரசாங்கம் செயற்படுவதற்கு இடைக்காலத் தடையை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து உடனடியாகவே திங்கட்கிழமை இரவு ஐ.தே.க.வின் தலைவர்களைக் கொண்ட குழு ஒன்று ஜனாதிபதி செயலகத்தை நோக்கி விரைந்தது. நீதிமன்றத் தீர்ப்பால் ஜனாதிபதி தனது இறுக்கமான நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. அரசாங்கத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு இணங்குவார் என்ற நம்பிக்கையுடனேயே அவர்கள் அங்கு விரைந்தார்கள். ஆனால், இதற்கு முரணாக சந்திப்பு ஆரம்பமானபோதே, "ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்க முடியாது" என மைத்திரி உறுதியாகச் சொல்லிவிட்டார்.

**தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து கீழ் இறங்க மைத்திரி தயாராகவில்லை. ரணிலுக்குப் பதிலாக மற்றொருவரை பிரதமராக பிரேரிக்க ஐ.தே.க.வும் தயாராகவில்லை.**

"ரணில் விக்கிரமசிங்கவை விட வேறு யாரும் பிரதமர் பதவிக்காக பிரேரிப்பதற்கு உங்களிடம் இல்லையா?" எனக் கேள்வி எழுப்பிய மைத்திரி, "ரணிலை மீள நியமிப்பது குறித்து உங்களுடன் பேசுவதற்கு நான் தயாராக இல்லை" எனவும் அடித்துக் கூறிவிட்டார். நீதிமன்றத்தின் தீர்ப்பு, சர்வதேச அழுத்தங்கள் போன்றவற்றால் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி கொஞ்சமாவது தளர்த்திக்கொள்வார் என எதிர்பார்த்த ஐ.தே.க.வினருக்கு இது அதிர்ச்சியானதாகவே இருந்திருக்கும். இந்த விவகாரத்துக்கு அத்துடன் முற்றுப்புள்ளிவைக்க ஜனாதிபதி முற்பட்ட போதிலும், ஐ.தே.க.வினர் தயாராக விருக்கவில்லை. ஐ.தே.மு.வின் சார்பில் சஜித் பிரேமதாச முதலில் உரையாற்றினார். பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர மற்றொருவரைக் கொண்டுவருவது குறித்து தம்மால் சிந்திக்க முடியாது எனத் தெரிவித்த சஜித், ரணில் தலைமையில் ஐ.தே.க. மீண்டும் அரசாங்கத்தை அமைத்துக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதியை



வலியுறுத்தினார். சஜித் பிரேமதாச பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி உட்பட சிலர் குறிப்பிடுகின்ற போதிலும், அதற்குத் தான் இப்போதைய நிலையில் தயாராக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதாகவே சஜித்தின் இந்த உரை இருந்தது.

சஜித்தைத் தொடர்ந்து ஐ.தே.க. எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்லையும் ஜனாதிபதியின் முடிவை கடுமையாக எதிர்த்தார். "உங்களுடைய தீர்மானத்துக்கு எதிராக இரண்டு நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. உங்களுடைய செயற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்பதே இதன் அர்த்தம். பாராளுமன்றத்தில் அதிகளவு ஆதரவைக் கொண்டுள்ள கட்சியின் எம்.பி.யையே நீங்கள் பிரதமராக நியமிக்க வேண்டும்" என அவர் வலியுறுத்தியதாகத் தெரிகின்றது. இதனால் சீற்றமடைந்த நிலையிலேயே. "225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு ரணிலை பிரதமராக்க வேண்டும் எனக் கோரினால்கூட, நான் அதனைச் செய்யப்போவதில்லை" என மைத்திரி கடும் தொனியில் அறிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களில் ஐ.தே.க. தலைவர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்ந்துகொண்டார்கள். ரணிலை பிரதமராக நியமிப்பது குறித்து மைத்திரியுடன் தொடர்ந்தும் பேசுவதில் அர்த்தமில்லை என்பதுதான் அது. சந்திப்பை இடைநடுவில் முறித்துக்கொண்டு ஐ.தே.க. தலைவர்கள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியேறினார்கள். ஜனாதிபதியுடன் இனிமேல் பேசப்போவதில்லை எனவும் ஐ.தே.க. அறிவித்தது. அதேவேளையில், ஐ.தே.க.வைப் பொறுத்தவரையிலும் இது ஒரு கௌரவப் பிரச்சினை கூட. ஜனாதிபதிக்கும் இது ஒரு கௌரவப் பிரச்சினையாகியிருக்கும்.

தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து கீழ் இறங்க மைத்திரி தயாராகவில்லை. ரணிலுக்குப் பதிலாக மற்றொருவரை பிரதமராக பிரேரிக்க ஐ.தே.க.வும் தயாராகவில்லை. மைத்திரியின் இந்த இறுக்கத்தை உடைப்பதற்குத்தான் மற்றொரு மாற்றுத் திட்டத்தை ஐ.தே.க. தயாரித்திருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கையை வெளிப்படுத்தும் பிரேரணை ஒன்றை புதன்கிழமை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவதுதான் அந்தத் திட்டம். ஐ.தே.க.வுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து இதற்கு ஆதரவாக வாக்களித்தால் 116 வாக்குகளைப் பெற்று அதனை நிறைவேற்ற முடியும். ஜே.வி.பி. இதற்கு ஆதரவளிக்காது. கூட்டமைப்பு இது தொடர்பில் இறுதி முடிவை இன்று வரையில் "உத்தியோகபூர்வமாக" எடுக்காத போதிலும், கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்பதை ஐ.தே.க. தலைமை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

ஐ.தே.க.விடமுள்ள இறுதி ஆயுதம் இதுவல்ல. இதனையும் ஜனாதிபதி நிராகரிக்கலாம். அவ்வாறான நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக இம்பீச்மெண்ட் எனப்படும் குற்றப்பிரேரணை ஒன்றைக்கொண்டுவருவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அதனைவிட, ஜனாதிபதிக்கு எதிரான மக்கள் போராட்டம் ஒன்றை கொழும்பில் ஏற்பாடு செய்வதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருப்பதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது ஜனாதிபதி செயலகமும், ஜனாதிபதியின் இல்லமும் முற்றுகையிடப்படலாம்.

நீதிமன்றம் வழங்கப்போகும் தீர்ப்பில்தான் அடுத்தகட்ட நகர்வுகள் தங்கியுள்ளன. பாராளுமன்றக் கலைப்புக்கு நீதிமன்றம் அங்கீரமளித்தால் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும். பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக தீர்ப்பு வந்தால், மீண்டும் அவசரம் அவசரமாக எம்.பி.க்களை தமது பக்கத்துக்கு இழுப்பதற்கான குதிரை பேரங்கள் இடம்பெறும். அவ்வாறான நிலையில் ஜனாதிபதிக்கு எதிரான "இம்பீச்மெண்ட்" பாராளுமன்றத்துக்கு வருவதற்கான சாத்தியங்களும் அதிகமாக இருக்கும். இவை அனைத்தையும் பார்க்கும் போது வரப்போகும் தினங்கள் பரபரப்பானவையாக — அடுத்த கட்ட அரசியலைத் தீர்மானிப்பதாக இருக்கும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# தமிழ் அரசியல் கைதிகள் குறித்து தெளிவான நிலைப்பாடு எதுவும் அரசியல்வாதிகளிடம் இல்லை

## அருட்தந்தை சக்திவேல்

"தமிழ் அரசியல்வாதிகளுக்கு அரசியல் கைதிகள் தொடர்பில் தெளிவான அரசியல் நிலைப்பாடு இல்லை. இதனால்தான் அவர்கள் சட்டமா அதிபருடன் பேசவேண்டும் என்கிறார்கள். நீதித் துறையுடன் சே வேண்டும் என்கிறார்கள். இவர்களை வகைப்படுத்த முயல்கின்றார்கள்" எனக் குற்றஞ்சாட்டுகிறார் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'இலக்கு' வார இதழுக்கு பிரத்தியேகமாக அளித்த நேர்காணல் ஒன்றிலேயே வணபிதா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். "அரசியல் கைதிகள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு தமிழ்



அரசியல்வாதிகள் வராமலிருப்பதுதான் கவலைக்குரியது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவரது நேர்காணலின் முக்கியமான பகுதிகளை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

கேள்வி: அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நீண்டகாலமாக போராடி வருகின்றீர்கள். இந்தப் போராட்டத்தினூடாக நீங்கள் கண்டு கொண்ட முன்னேற்றம் குறித்து குறிப்பிட முடியுமா?

பதில்: அரசியல் கைதிகளுக்கான போராட்டம் மிகவும் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. மகிந்த ராஜபக்ஷ காலத்திலிருந்தே இந்தப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுத்துவருகின்றோம். இந்தப் போராட்டத்தின் மூலமாக பல்வேறு தரப்பினருக்கு நாம் தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து வந்திருக்கின்றோம். அரசாங்கத்துக்கு மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அழுத்தத்தைக் கொடுத்துவந்திருக்கின்றோம். அதனைவிட, மக்களை இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்கும் வகையில் நாம் கொண்டுவந்திருக்கின்றோம். இதனை எமக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக நாம் கருதுகின்றோம்.

அதேவேளையில், தெற்கில் இருக்கும் சிங்கள நண்பர்களையும் நாம் இதில் இணைத்துக் கொண்டிருக்கின்றோம். இது அடுத்ததாக எமக்குக் கிடைத்த ஒரு வெற்றி. அதுமட்டுமல்ல ஜே.வி.பி.யிலிருந்து பிரிந்தவர்கள் கூட எம்முடன் இணைந்துள்ளார்கள். அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டங்களில் அவர்களும் எம்முடன் இணைகின்றார்கள். ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடனும் நாங்கள் இது தொடர்பாகப் பேசியுள்ளோம். அவரும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டியவர்களே என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். எனவே வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் கூட அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டியவர்களே என்ற உணர்வை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். இது எமக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக நாம் கருதுகின்றோம்.

**அரசியில் கைதிகள் விடுதலை குறித்து தாங்கள் போராடிவரும் காலப்பகுதியில் அதற்குத் தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு எப்படியிருந்தது?**

தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில் தமது அரசியல் தேவைகளுக்காக இவர்களைப் பாவித்தார்களே தவிர, உண்மையாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற உணர்வுடன் அவர்கள் செயற்படவில்லை என்பது கவலைக்குரிய விடயம். ஏனென்றால் அரசியல் கைதிகள் எப்போது தமது விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டங்களை ஆரம்பிக்கின்றார்களோ அப்போது மட்டும்தான் இவர்கள் சிறைச்சாலைகளுக்குச் சென்று அவர்களைப் பார்க்கின்றார்கள்.

நாங்கள் இது தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்திருக்கின்றோம். அதில் அரசியல் கைதிகள் என்பவர்கள் தமிழ் அரசியலின் உயிர்நாடி. அவர்கள்தான் தமிழர்களின் அரசியலை முன்னோக்கி நகர்த்தியவர்கள். அவர்களில் ஒரு சாரார் மாவீரர்களாகிவிட்டார்கள். அவர்களில் ஒரு பகுதியினர்தான் இப்போது அரசியல் கைதிகளாக இருக்கின்றார்கள். மாவீரர்களுக்கு நாம் எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அதேபோன்று இவர்களையும் அதேநிலையில் வைத்து நாம் பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த நிலைக்கு அவர்களை உயர்த்துவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் தயாராக இல்லை. இவர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடுவது என்பது விடுதலைப் புலிகளுக்கு மீள உயிர் கொடுப்பதாகிவிடுமோ எனச் சிந்திக்கின்றார்கள். அது மட்டுமல்ல இவர்கள் இந்தியாவுக்குப் பயந்தவர்களாகவும் உள்ளனர். இவர்கள் இந்தியாவின் நிகழ்ச்சிநிரலுக்குள் இருந்துகொண்டுதான் அரசியல் கைதிகள் விடயத்தைப் பார்க்கின்றார்கள். தமிழ் மக்களைச் சந்திக்கும் போது ஒரு முகமும். கொழும்பில் வந்து அரசாங்கத்தைச் சந்திக்கும்போது இன்னொரு முகத்தையும், இந்தியாவுக்குச் செல்லும் போது மற்றொரு முகத்தையும் இவர்கள் காட்டுகின்றார்கள். இவர்களுடைய இத்தகைய செயற்பாட்டின் காரணமாகத்தான் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை இந்தளவுக்குத் தாமதமாகிறது என்பதுதான் எமது ஆதங்கம்.

**தற்போது சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவர்களுக்கு நீதிமன்றத்தினூடாக விசாரணை பொறிமுறை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டதா?**

பதில்: மகிந்த ஆட்சிக்காலத்தில் மன்னாரில் விசேட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. அதேபோல அநுராதபுரத்திலும், கொழும்பிலும் ஒவ்வொரு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், மன்னாரில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் செயற்படவில்லை. அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரணை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அநுராதபுர விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஆனால், அதில் வேறுவேறு வழக்குகளும் விசாரிக்கப்படுகின்றது. கொழும்பில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் கூட அவ்வாறு செயற்படவில்லை. எனவே இவர்கள் சர்வதேசத்துக்கும் தமிழ்களுக்கும் காட்டிக்கொள்வதற்கே இவற்றைச் செய்கின்றார்கள்.

**இலங்கையில் ஆங்காங்கே நடைபெறும் சில அசம்பாவித சம்பவங்கள் அரசியல் கைதிகளின் விடுதலையில் தாக்கத்தை ஏற்படுத்துமா? குறிப்பாக வவுணத்தீவு சம்பவங்கள் போன்றன...**

பதில்: வவுணதீவுச் சம்பவம் ஒரு திட்டமிட்ட சம்பவம் என்பதுதான் எமது கருத்து. ஏனென்றால் தற்போது மகிந்த தரப்பினர் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற ஒரு நகர்வை மேற்கொண்டார்கள். ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று தமது பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக. ஆனால், கூட்டமைப்பு ஐ.தே.க.வுக்கு ஆதரவளிக்கப்போவதாக அறிவித்த பின்னர்தான் இந்தச் சம்பவம் இடம்பெறுகின்றது. அதனால், இந்த இரு சம்பவங்களுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். விடுதலைப் புலிகள் தமது செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக ஒரு அச்சத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை இப்போது மகிந்த தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் பேச்சு இடம்பெற்றது. இரண்டு வாரங்களில் அது தொடர்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் காலப்பகுதியிலேயே வவுணதீவுச் சம்பவம் இடம்பெற்றது. எனவே இந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் வவுணதீவுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என நாம் கருதுகின்றோம். இது திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு சம்பவமாகவே இருக்கவேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகியவர்கள் சிலர் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

**அரசியல் விடுதலை குறித்து ஆராய்வதற்காக தற்போது அமைக்கப்பட்ட குழுவின் நடவடிக்கை குறித்து எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பாராளுமன்றத்தில் ஒரு குழப்பநிலை ஏற்பட்ட பின்னர்தான் மகிந்த தரப்பினரால் இந்தக்குழு நியமிக்கப்பட்டது. இந்தக்குழு அரசியல் கைதிகள் விடயத்தை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இது ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமல்ல. இதில் தமக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காகவே இந்தக் குழுவை அமைத்தார்கள். முதலில் இவர்களை அரசியல் கைதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். இந்தக்குழுவில் அப்படிப்பட்ட அரசியல் சிந்தனையாளர்கள் யாரும் இல்லை. வியாழேந்திரன், அங்கஜன், ராமநாதன், நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள்தான் இதில் இருந்தனர். அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் நீண்டகாலப் போராட்டமும் கோரிக்கையுமாகும். தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவும், அரசியல் கைதிகள் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்புக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்காகவுமே இந்த முயற்சியை அவர்கள் மேற்கொண்டார்கள். உண்மையில் விடுதலை செய்வதற்காக அல்ல, விடுதலை செய்வதாக ஒரு படத்தைக் காட்டுவதற்கான முயற்சிதான் இது. தமிழ் மக்களுடைய பிரச்சினை என்பது அரசியல் கைதிகளின் பிரச்சினை மட்டுமல்ல. ஏனைய பிரச்சினைகளையிட்டு கவனம் செலுத்தாமல் இதனையிட்டு மட்டும் எதற்காக கவனம் செலுத்தினார்கள் என்பது அடுத்த வேள்வி.

**இலங்கை அரசாங்கம் கைதிகள் குறித்து முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கூறி வருகின்றது கைதிகளின் நிலை குறித்து அரசுக்கு இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லையா?**

தொடர்ச்சி 7ம் பக்கம்



# ஒரு கிலோ தங்கம் வென்ற ஈழத்துப் பெண்

IBC— தமிழ் தொலைக்காட்சி நடாத்திய நாட்டியத் தாரகை நடனக்கலைப் போட்டி நிகழ்ச்சியில், சுவிட்சலாந்தைச் சேர்ந்த மிதுஜா அமிர்தலிங்கம் வெற்றி பெற்றார்.

நேற்று சுவிட்சலாந்து போரம் பிரைபோர்க் மண்டபத்தில் நடைபெற்ற ஐ.பி.சி. தமிழா நிகழ்ச்சியில் சர்வதேச நடுவர்கள் முன்நிலையில் தமது திறமைகளை நிரூபித்த ஐந்து போட்டியாளர்கள் மத்தியில் இருந்து மிதுஜா வெற்றியாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

IBC தமிழ் நிறுவனத் தலைவர் கந்தையா பாஸ்கரன் மற்றும் திருமதி வைதேகி பாஸ்கரன் ஆகியோர் ஒரு கிலோ தங்கத்தினாலான கிரிடத்தை வெற்றியாளருக்கு சூடினார்கள்.

இந்தப் போட்டியின் இறுதிச் சுற்றில் பங்கு பற்றிய மற்றய நான்கு போட்டியாளர்களுக்கும் தங்கம் பரிசுகளாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இனியாவது திருந்துங்கள்

**மாணிக்கம் ஜெகன்**

எங்கள் வீட்டு..செல்விகளை..
சீரழிக்க துணை போனவனோடு...
செல்பியா...நல்லது..
நாளை உங்கள் வீட்டு...
உத்தமிகளின் உடைகளும்..
களவாடப்பட்டு...
கன்னி கழிக்கப்படும் ..

முழத்துக்கு முழம் எங்கள்..
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்
தேடல் போராட்டம்
வருடங்கள் கடந்து தேடுகிறது...
அங்கே ஒரு நாட்களிலாவது..
கலந்துகொண்டு ..
இந்த தேசத்துக்காக...
பங்களிப்பு செய்திருப்பாயா..நீ..

இனத்தை அழித்தவனோடு..
என்ன இளிப்பு வேண்டியிருக்கு..
கூட்டமாய் அழிக்க குண்டு
போட்டவனுக்கு..கோசம் போட..
என்ன தேவை உனக்கிருக்கு..

தமிழ் இனத்தின் உரிமை கேட்டு..
ஆர்ப்பாட்டம் செய்யும்போதும் ..
கண்டன ஊர்வலம் நடத்தும்
போதும்...உன்னை எங்கேயும்
காணவில்லையே நாம்..
அங்கே வந்து செல்பி எடுத்து..
அகிலம் பூரா பரப்பி இருந்தால்..
உலகம் அறிந்திருக்கும்..
ஒருவேளை
ஈழத்தமிழர் துயரத்தை உலகம்
தெரிந்திருக்கும் ..

செல்பி எடுக்கும் சிநேகிதா..
உயிர்களை விதைத்த மண்ணில்
உயிர்ப் பலி எடுத்தவனோடு..
உரசிக் கொண்டு நிற்கிறாய்..
என்பதை எப்போது நீ உணரப் போகிறாய்..

நாளை உன் தேசம்
நாசமாக்கும் திட்டத்தை..
எதிரி..சூசகமாக செய்கிறான்..
நீயோ. எதுவுமே அறியாமல்..
சிரிக்கிறாய்...குதிக்கிறாய்
கும்மாளமிட்டு கூத்தடிக்கிறாய்..

என் இனமே ஏமாற்றப்பட்டு..
ஏதிலியாக்கப்பட்ட நிலத்தில் ..
எதிரியின் வரவை கொண்டாடுவோன்..
நிச்சயமாக... என் இனத்தின் உதிரத்தின்
வேர்களில் விளைந்த விருட்சமாக
இருக்காது மாறாக குருவிச்சைகளின்
குடும்பத்து உறவாகவே இருக்கும்.

அந்நியத்து அடிமைகளே கூத்தடியுங்கள்..
கும்மி கொட்டுங்கள்..
என்றோ ஒரு நாள் ...
என் தேசம் விடியும் போது...
உங்கள் தேகம் அழியும்
இருந்து பாருங்கள்..
இனியாவது. திருந்தி வாழுங்கள்..

**2ம் பக்கத் தொடர்ச்சி..**

இல்லை முதல் இருந்த மகிந்த இப்ப ஆட்சிக்கு வரத்துடிக்கின்றார் மைத்ரி, ரணில், எல்லாரும் ஒரே பிரச்சனையில் இருக்கின்றார்கள் பதவி ஆசை யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது என்பது உண்மை நாங்கள் உலகத்தினைத்தான் நம்பி இருக்கின்றோம். இவ்வாறானவர்கள் ஆட்சிக்கு வருவதால் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் நடத்திவரும் போராட்டத்தின் பலம் குறைக்கப்படும் இளம் சமூதாயம் அழிக்கப்படும் இது உண்மை.

**இந்த போராட்டத்தில் வருபவர்கள் மனதளவில் எவ்வாறு இருக்கின்றார்கள்?**

இந்தபோராட்டத்திற்கு வரும் அம்மாக்கள் மனதளவில் பாதிக்கப்பட்டு ள்ளார்கள் அரசாங்கம் சரியான முடிவினை சொல்லாத காரணத்தால் தான் நாங்கள் உளவியல் ரீதியில் தாக்கப்பட்டுள்ளோம் அதனை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. அரசியல் என்ற பெயரில் இழுத்தடிப்பு செய்து வருகின்றார்கள் ஆனால் எங்கள் உயிர் போனாலும் இறுதிவரைக்கும் எங்களுக்கான தீர்வினை எங்கள் பிள்ளைகளை கேட்டு போராடிவருவோம் என்பது உண்மை. இவ்வாறான நிலையில் முல்லைத்தீவில் ஒரு அம்மா, சிலாவத்தையினை சேர்ந்த தேவசகாயம் என்ற அம்மா மகளைத் தேடிக் கொண்டிருந்தா அவர் அண்மையில் பிள்ளையினை காணாமுடியாத ஏக்கத்தில் உயிரிழந்துள்ளார் அவரின் கணவர்தான் இருக்கின்றார் அவர்களும் தேடுகின்றார்கள் இவ்வாறு பலர் இருக்கின்றார்கள். எங்கள் போராட்டத்தை நம்பிக்கையினம் செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார்கள் சில நிறுவனங்கள், அரசாங்கத்தினால் விடப்படும் ஆட்கள் தங்கள் சுயலாபத்திற்காக மக்களை குழப்பம் அடைய செய்ய வைத்துள்ளார்கள் அதனையும் நாங்கள் எதிர்கொண்டு ள்ளோம் இவ்வாறான குழப்பத்தால் நிறைய பிளவுபாடுகள் இருக்கின்றது. காணாமல் போனவர்களை தொடவேண்டாம் என்று நேரடியாக சொல்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் சார்பானவர்கள் என்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு இருக்கின்றது. எமது போராட்டம் தொடக் கத்தில் பல அச்சுறுத்தல் இருந்தது தற்போது எங்கள் பிரச்சனை யூ.என் ஊடாக கொண்டுசெல்வதால் நேரடியாக எந்த அச்சுறுத்தலும் இல்லை காணாமல் போன உறவினர்களிடம் சென்று எங்கள் கருத்தினை அறிவதற்கு புலனாய்வாளர்கள் ஆர்வமாக இருக்கின்றார்கள்.




**ஜெனீவா சென்று வந்துள்ளீர்கள் ஐ.நாவின் அடுத்த கட்ட நகர்விற்கு என்ன செய்யவேண்டும்?**

நான் ஜெனீவவிற்கு சென்றுவந்தேன் அது எனது முதல் தடவை அனுபவம் அதில் நல்ல தீர்மானங்கள் எடுக்ககூடியவகையில் மாற்றவேண்டும் எல்லா நாட்டுடனும் இணைந்து கதைப்பதன் ஊடாக எங்களுக்கு ஏற்றநாடுகள் ஆதரவினை வழங்கவைப்பதன் ஊடாக மாற்றத்தினை ஏற்படுத்தலாம் எதிர்வரும் மார்ச்மாதம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் ஐ.நா அறிக்கையில் என்ன முடிவு வரும் என்று நாங்களும் அறிக்கைகளை 15.12.18ற்கு முன்னர் ஒப்படைக் கின்றோம்.

அதன்பின்னர் தான் ஐ.நாவில் என்ன முடிவு வரும் என்பதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம். காணாமல் போனவர்களின் நிலை தொடர்பில் நம்பிக்கையான தீர்வு ஒன்றினை அவர்கள் பெற்றுத்தருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து அமெரிக்கா, இந்தியா உயர்மட்ட ஆலோசனை

சிறிலங்காவின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக இந்தியாவும், அமெரிக்காவும் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், அமெரிக்காவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.இதன்போது, அவர் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புகளின் போது, இந்தோ— பசுபிக் பிராந்தியத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தி ஆராயப்பட்டது. குறிப்பாக, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது, முக்கியமாக— விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகள் தொடர்பாகவும் அமெரிக்க— இந்திய தரப்புகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன.



## மட்டக்களப்பு மாநாகர சபையின் தீர்மானத்துக்கு தமிழ்மக்கள் வரவேற்பு

மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெற்றெடுக்கும் தமிழ் குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என மாநகர சபை அறிவித்துள்ளது. மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவனால் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரனை உறுப்பினார்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழர்களின் எண்ணிக்கையில் காணப்படும் வீழ்ச்சியைக் கருத்தில்கொண்டு, எதிர்காலத்தில் தமிழர்களின் செறிவினை அதிகரிக்கும் நோக்குடனேயே தான் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளதாகக் முதல்வர் கூறியுள்ளார். மாநகர சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் இதற்கான நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்குத் தேவையான நிதியினை மாநகர சபை ஒதுக்கீடு செய்வதுடன் புலம்பெயர் உறவுகளிடம் இருந்தும் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போரின்பின் வடக்கில் அங்கக் குறைபாடுகளுடைய குழந்தைகள் பிறப்பு அதிகரிப்பு

2009ல் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் குறிப்பாக வடக்குப் பகுதியில் அவையங்கள் செயல்படாத நிலையிலும் அவயங்கள் இழந்த நிலையிலும் பிறக்கும் குழந்தைகளின் விகிதம் அதிகரித்துள்ளதாக ஜெய்ப்பூர் நிறுவன வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்கான காரணங்கள் வலுவான ஆய்வுகளினூடாக கண்டறியப்படாவிடினும், தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் கடுமையான யுத்தத்திற்கு முகம் கொடுத்தமையால் ஏற்பட்ட பாதிப்புகளாக இருக்கலாமென சந்தேகம் உள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத ஜெய்ப்பூர் நிறுவன அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். இதைவிட அண்மைக்காலமாக விபத்துக்கள் மூலமாகவும் அதிகளவான மக்கள் இறப்பதும் அவயங்களை இழந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

5ம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் கைதிகள் என்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூட தெளிவான நிலைப்பாடு கிடையாது. இவர்களுக்குப் பொது மன்னிப்பு கொடுக்க வேண்டும் என கூட்டமைப்பினர் கோரினார்கள். அதன்மூலம் இவர்களை நாங்களே குற்றவாளிகளாக்குகின்றோம். எனவே இந்த அரசியல் கைதிகள் குற்றவாளிகளா என்பது முதலாவது கேள்வி. இவர்கள் தமிழ் அரசியலின் உயிர்நாடிகள் என நான் முன்னரே குறிப்பிட்டிருக்கின்றேன். இவர்களுக்குப் பொது மன்னிப்புக் கொடுங்கள் எனக்கோரும்போது அவர்கள் குற்றவாளிகளாக்கப்படுகின்றார்கள்.

இரண்டாவதாக, இவர்களுக்கு புனர் வாழ்வளிக்குமாறு கூட்டமைப்பினர் கேட்கின்றார்கள். குற்றவாளிகளுக்குத்தான் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும். எனவே தமிழ் அரசியல்வாதிகளுக்கு அரசியல் கைதிகள் தொடர்பில் தெளிவான அரசியல் நிலைப்பாடு இல்லை என்பது தெளிவாகின்றது. இதனால்தான் அவர்கள் சட்டமா அதிபருடன் பேசவேண்டும் என்கிறார்கள். நீதித்துறையுடன் பேச வேண்டும் என்கிறார்கள். இவர்களை வகைப்படுத்த முயல்கின்றார்கள். அரசியல் கைதிகள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் வராமலிருப்பதுதான் கவலைக்குரியது.

**அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பதில் ஈடுபட்டிருந்த கைதிகளின் போராட்டத்தை பொது அமைப்புக்கள் கையில் எடுப்பதாக கூறி அவர்களின் போராட்டத்தை நிறுத்தினீர்கள். நீங்கள் அவ்விடயத்துக்கு தலைமை வகித்திருந்தீர்கள். அதன் பின்னர் கைதிகளின் விடுதலைக்காக பொது அமைப்புக்களை ஒன்றிணைத்து நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?**

அநுராதபுரத்தில் அரசியல் கைதிகள் ஒரு மாதகாலமாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். எம்மைப் பொறுத்தவரையில் அரசியல் கைதிகள் அவர்களே தமது விடுதலைக்காக போராட்டத்தை நடத்தவேண்டிய தேவை இல்லை. அவர்கள் தமது வாழ்வைக் கொடுத்தவர்கள். அவர்களுக்காகப் போராட வேண்டியது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பொறுப்பு. ஏனெனில் அவர்கள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவோ, குடும்பங்களுக்காகவோ களத்தில் நிற்கவில்லை. இவர்கள் நீண்டகாலமாக சிறைக்குள் வாடிக்கொண்டிருப்பது ஒட்டுமொத்த தமிழர்களின் விடுதலைக்காக போராடியதால்தான். அதனால் அவர்கள் போராடக்கூடாது. அவர்களுடைய குடும்பங்கள் வீதிக்கு வரக்கூடாது. இதனைக் கையில் எடுக்க வேண்டியது தமிழ் மக்கள். அத்துடன் இவர்கள் சாகக்கூடாது. இவர்கள் வாழ வேண்டும்.

இதற்காகத்தான் அவர்களைப் போராட வேண்டாம் எனக் கூறிவிட்டு அவர்களுடைய போராட்டத்தை நாங்கள் எமது கைகளில் எடுத்தோம். நாம் அடுத்த கட்டச் செயற் பாடுகளுக்குச் செல்வதற்கு முன்னதாக அரசியல் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் அரசியல் கைதிகள் விடயத்தை பகடைக்காய்களாகப் பயன்படுத்த சிலர் முயல்கின்றார்கள். அதனால் நாம் தற்காலிகமாக அது குறித்த செயற்பாடுகளை நிறுத்திவைத்துள்ளோம். ஆனால், வடக்கிலும் தெற்கிலும் இது தொடர்பில் செயற்படும் அமைப்புக்களுடன் நாம் தொடர்ந்தும் பேசிவருகின்றோம்.

அதேவேளையில், மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 ஆம் திகதி கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நாம் மேற்கொள்கின்றோம். இதில் அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுபிப்பு, காணாமலாக்கப்பட்டோர் விடயம் போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்துகின்றோம்.

**மனித உரிமைகள் தினம் நாளை அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த உங்களுடைய கருத்து என்ன?**

இலங்கையில் மனித உரிமைகள் என்பது ஏட்டில் இருந்ததே தவிர நடைமுறையில் இருக்கவில்லை. 1948 முதல் இன்று வரை இந்த நிலை தொடர்கின்றது. 1948 ல் முதலாவது பாராளுமன்றத்திலேயே மலையக மக்களுடைய வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டது. 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1964 ஆம் ஆண்டு சிறிமா — சாஸ்திரி உடன்படிக்கை மூலம் ஆடு, மாடுகளைப் போல மலையக மக்கள் பிரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டனர்.

1972, 1978 ஆண்டு யாப்புக்கள், பயங்கராத தடைச் சட்டம் என்பன தமிழ் மக்களின் அரசியலை ஒடுக்குவதற்குக் கொண்டுவரப்பட்டவையாகவே இருந்தது. 1987 இலங்கை — இந்தியா உடன்படிக்கைகூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவற்றையெல்லாம் உரிமை மீறலாகவே நான் பார்க்கிறேன். இலங்கை அரசாங்கம் பெரும்பான்மை பௌத்த சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சிங்கள மக்களுடைய அரசியலைப் பாதுகாக்கும் வகையில்தான் இங்கு யாப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

இதற்குள் மனித உரிமைகள் என்பது அவர்கள் சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக கதைக்கும் ஒன்றே தவிர, அடிப்படை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அக்கறை எதுவும் இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

# சர்வதேச மனித உரிமைகள் தினம் தமிழ் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுமா?

**செங்கோடகன்**

எதிர்வரும் பத்தாம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். இந்த நாள் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குத் துணைபுரியுமா என்ற மில்லியன் டொலர் கேள்வியை எழுப்பியுள்ளது.

சர்வதேச ரீதியில் அனைத்து ஆளும் வர்க்கங்களும் தாங்கள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அணிதிரண்ட மக்களின்மீது இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது யதார்த்தம். தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்டுள்ள பல்வேறுவகையான போராட்டங்களையும் இலங்கையின் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடனேயே பார்த்து வந்துள்ளன. இதன் மூலம் இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது நிரூபணமாகியுள்ளது.

காலனி ஆதிக்கத்தின் இறுதிப்பகுதியிலேயே இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடங்கிவிட்டன. காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு செயற்பட்ட இலங்கையின் இரண்டு தேசிய இனங்களையும் பிரித்தாளுவதில் அன்றைய பிரித்தானிய ஆளும் வர்க்கம் வெற்றி கண்டிருந்தது. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட சிங்கள பௌத்த மேலாதிக்கம் இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மாற்றும் முயற்சியில் கங்கணம் கட்டி செயற்படத் தொடங்கியிருந்தது. காலனி ஆதிக்கம் முடிவுற்ற கையோடு இலங்கையின் தொழிலாள வர்க்கமாகத் திகழும் பெருந்தோட்ட தொழிலாள வர்க்கத்தின் குடியுரிமையைப் பறித்து பல இலட்சக்கணக்கான தமிழ் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கியது. இதன் மூலம் அவர்களின் தொழிலாள ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்வளையை நசுக்கியது.

அதன் பின்னர், 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தினூடாக இந்த நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தின் மொழியுரிமையைப் பறித்தது. இதுவே பின்னர் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய வாழிடத்தைவிட்டு அவர்களை விரட்டியடிப்பதற்கும், வடக்கு—கிழக்கில் அவர்களின் நிலத்தொடர்பை நிரந்தரமாகத் துண்டித்து அவர்களின் தேசிய இன அடையாளத்தை இல்லாமல் செய்வதற்கும் காரணமாக அமைந்தது. இவைகள் அவர்களது மொழி, வாழ்விடம், கலாசாரம், பண்பாடு போன்ற அனைத்தையும் இழப்பதற்கும் மெல்ல மெல்ல எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள பௌத்த மேலாதிக்கத்துடன் இரண்டறக் கலக்கச் செய்யும் முயற்சிக்குக் காரணமாக அமைந்தது. இதனை எதிர்த்து தமிழ்த் தேசிய இனம் முதலில் சாத்வீக முறையிலும் பின்னர் ஆயுதப் போராட்ட ரீதியிலும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தது. இந்த இரண்டு வகையான போராட்டங்களையுமே சிங்கள பௌத்த மேலாதிக்க ஆளும் வர்க்கம் பயங்கரவாதமாகவே சித்திரித்தது.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலகட்டத்தில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கையில் ஆட்சி செய்த ஜே.ஆர். ஜெயவர்த்தனே வடக்கு—கிழக்கில் இடம்பெறுவது இடதுசாரி சக்திகளால் முன்னெடுக்கப்படும் மார்க்சிய பயங்கரவாதம் என்றும் அவர்கள் முழு நாட்டையும் கம்யூனிச நாடாக மாற்ற முயற்சிக்கின்றனர் என்றும் கூறி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் ஆளும் வர்க்கத்தினரை தனக்குச் சார்பானவர்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதில் வெற்றியும் ஈட்டியிருந்தார். ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் அண்டை நாடான இந்தியா அன்றைய சோவியத் சோசலிசக் குடியரசுடன் (ரஷ்யா) நெருக்கமான உறவுகளைப் பேணியிருந்ததன் காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட ரஷ்ய எதிர்ப்புச் சக்திகளை தனக்கு ஆதரவாகத் திரட்டும் நோக்கில் மேற்படிக் கருத்தை வெளியிட்டிருந்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இந்த நேரத்தில் மக்கள் சீனக் குடியரசு சோவியத் யூனியனை சமூக ஏகாதிபத்தியம் என்று வர்ணித்ததுடன், அமெரிக்காவைவிடவும் சோவியத்தே தமது முதலாவது எதிரி என்று பிரகடனப்படுத்தியதும் இதுவே சோவியத் யூனியன் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியிலேயே இலங்கையின் தமிழ்த் தேசிய இனத்திற்கான மனித உரிமைகள் மீறலையும், அதற்கு எதிராக தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியையும், அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளையும் ஆராய வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய இனத்தின் தலைமை தமிழ் மக்களின் நலன்சார்ந்து செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட நிலையிலேயே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் எழுச்சிபெறத் தொடங்கியது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இதனை ஒட்டுமொத்த இலங்கையையும் கம்யூனிஸ்ட் நாடாக மாற்றுவதற்கான போராட்டம் என்று வர்ணித்தார். ஆனால் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு மனமுவந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது பிரிந்து சென்ற ஏனைய இடதுசாரிக் கட்சிகளோ ஆதரவளிக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. இலங்கையைப் பொறுத்தவரை, இடதுசாரி சக்திகள் தம்மைப் பிரபலப்படுத்திக்கொள்வதற்கே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தனர் என்பதை இன்றைய இடதுசாரித் தலைவர்கள் மகிந்தவுடன் இணைந்து இனவாதத்தைக் கக்குவதன் மூலம் உணர்ந்துகொள்ள முடியும். இவர்கள் அனைவரும் முன்னர் தமிழர்களுக்கு பிரிந்துபோவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உள்ளது என்பதை அங்கீகரித்தவர்கள் என்பதுதான் இங்கு முரண்நகை.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று முன்னவர்களின் கூற்றை வழிமொழிந்த மகிந்தராஜபக்ச 11ஆம் திகதி செப்டம்பர் மாதம் 2001இல் நடைபெற்ற இரட்டைக் கோபுரத்தைக் காரணம் காட்டி இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்குக் கைகோர்க்குமாறு அறைகூவல் விடுத்தார். அனைத்தையும் கூர்ந்து அவதானிக்கும் சர்வதேச சமூகமும் என்ன காரணத்திற்காகவோ இலங்கை ஆளும் வர்க்கத்தின் அறைகூவலுக்குச் செவிமடுத்து, அதனுடன் கைகோர்த்து தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்வதில் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தது. பின்னர் சுதாரித்துக்கொண்ட அதே சக்திகள் இப்பொழுது இலங்கையில் இடம்பெற்ற யுத்தகுற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் தமது கரிசணையைச் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டு பத்தாண்டுகள் பூர்த்தியாக உள்ள நிலையிலும் அரசியல் ரீதியாக கையறு நிலையில் உள்ள தமிழ்த் தேசிய இனம் தனக்கான நீதிக்காக இன்றளவிலும் சர்வதேச சமூகத்திடம் நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் நிறைவடையப் போகும் நிலையில் தமக்கான உரிமைகளை சர்வதேச சமூகம் பெற்றுக்கொடுக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே எதிர்வரும் பத்தாம் திகதி அனுட்டிக்கப்படும் ஐ.நா. மனித உரிமைகள் தினத்தை தமிழ்த் தேசிய இனம் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறது.

இலங்கை ஐ.நாவிற்கே பல பாடங்களைப் புகட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐ.நா. சபையின் உயர்பதவிகளில் உள்ளவர்கள் அதன் பின்னர் மியான்மரில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போதும் சிரியாவில் நடைபெற்ற மோதல்களின்போதும் கொரிய



தீபகற்பத்தில் நிலவிய பதற்றத்தின்போதும் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பதற்றத்தின்போதும் விரைந்து செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக சவுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜமால் கஷோகி துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் அமைந்துள்ள சவுதி அரேபிய தூதரகத்தில் வைத்து கடந்த ஒக்டோபர் மாதம் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொலையைத் தொடர்ந்து உடனடியாகச் செயற்பட்ட ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையகம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தது.

மேற்படி விடயங்களில் மிகவும் விரைவாகச் செயற்படும் சர்வதேச ஆளும் வர்க்கங்களும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட ஐ.நா.சபையின் உறுப்புக்கள் பத்தாண்டுகளாக நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் வீதிகளில் இறங்கி போராடிவரும் மக்களின் விடயத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பது ஏன் என்ற கேள்வி அந்த மக்களால் எழுப்பப்படுகின்றது. சர்வதேச நாடுகளின் விடயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இலங்கை கற்றுக்கொடுத்துள்ளது என்று கூறும் அவர்கள் தமது உயிரைத் தவிர கொடுப்பதற்கு ஏதும் இல்லை என்ற உணர்வுடன் வீதிகளில் இறங்கியிருக்கும் மக்களுக்கு என்ன சொல்லப்போகின்றது என்ற கேள்வி மனித உரிமை ஆர்வலர்கள் அனைவராலும் எழுப்பப்படுகின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளை மதித்து இலங்ஜ அரசாங்கம் செயற்படவேண்டும் என்று தெரிவிக்கும் சர்வதேச சமூகமும் ஐ.நாவும் அதனை அடைவதற்காக அந்த மக்களிடம் இருந்த அனைத்து வழிகளையும் அடைத்துவிட்டு தாமும் எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருப்பது எந்தவகையில் நியாயம் என்ற கேள்வியையும் மனித உரிமை ஆர்வலர்களும், ஜனநாயக சக்திகளும் எழுப்புகின்றனர். இலங்கையை மாறிமாறி ஆட்சி புரிபவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை

தொடர்ச்சி 11ம் பக்கம்

# மனித உரிமைகள் என்பது வெறும் சொற்கள்தானா?

**தீபச் செல்வன்**

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இரணைமடு குளத்தின் வான் கதவுகளை திறப்பதற்காகவே அவர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.



மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத்தின் தலையீடு

அரசாங்க அலுவலகத்தின் நடவடிக்கைகளின் பிரகாரம், ஜனாதிபதி மைத்திரிக்கு ஆலாத்தி எடுப்பதற்காக இரண்டு பெண்களும் ஏற்பாடு செய்யப்பட்டனர். இதே நாட்களில் விடுதலைப் புலிகளின் பெண் போராளி ஒருவரை அடையாளம் காணுமாறு ஒரு புகைப்படம் முகப்புத்தகங்களில் பகிரப்பட்டது. போர் வெறியுடன் இலங்கை இராணுவத்தினர் சூழ்ந்து நிற்க பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் அந்தப் பெண்போரளி தரையில் வீழ்ந்தபடி இருக்கிறார்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் நினைவுகூரப்படும் இக்காலத்தில் அந்தப் பெண் போராளியின் புகைப்படம் பார்ப்பவரை அலைக்கழிக்கும். எமது மக்களின் உரிமைக்காக போராடிய பெண் போராளி ஒரு கைதியைப் போல பிடித்து வைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்களைப் பார்த்து மனம் நோகும் சமயத்தில், சில பெண்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆலாத்தி எடுக்கும் மற்றுமொரு காட்சியையும் பார்க்க நிர்பந்திக்கப்படுகிறோம். இலங்கைத் தீவைப் பொறுத்தவரை ஒடுக்குபவர்களும்சரி, ஒடுக்கப்படுகிறவர்களும்சரி, மனித உரிமை என்ற சொல்லை வெறும் சொல்லாகக் கூட அறியாத அல்லது பொருட்படுத்தாத ஒரு சூழல்தான் நிலவுகிறது என்பதையே இந்த நிகழ்வுகள் மிக எளிமையாக சொல்லிச் செல்கின்றன. ஒரு மனிதனின் அடிப்படை உரிமை என்ன? தான் பிறந்த மண்ணில் தனக்கான உரிமைகளுடன் வாழ்தலே அடிப்படை உரிமையாகும். ஒரு மனிதன் வாழும் உரிமையைப் பெறுவதும் மற்றவரை வாழவிடும் வகையில் நடப்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரகடனத்தின் அடிப்படை அம்சமாகவும் இருக்கிறது. அப்படிப் பார்க்கையில், நாம் எமக்கான வாழ்வைத்தான் வாழ்கிறோமா? இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில், சிங்களப் பேரினவாத அரசின் கீழ் நாம் ஒடுங்கியும் அடங்கியும் வாழவேண்டும் என ஆள்பவர்கள் நினைக்கின்றனர். இதுதான் யதார்த்தமான நிலை. நாம் பிறந்த மண்ணில் நமது உரிமைகளுடன் வாழ முடியவில்லை. பெரும்பான்மையினமே எமது உரிமைகளுடன் எம்மை வாழ அனுமதிக்கவும் இல்லை மிகவும் வெளிப்படையான விசயம். இலங்கையில் புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்சினைக்கு இதுதான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. எம்முடைய மண்ணில் நாம் வாழ முடியாது. நம்முடைய அடையாளங்களுடன் நாம் வாழ முடியாது. நாம் நாமாக வாழ முடியாது. நம்முடைய வரலாற்றைப் படிக்க முடியாது. நம்முடைய வரலாற்றை பேச முடியாது. இழந்த உரிமைகளைப் பற்றி பேசவும் அதனைக் கோரவும் முடியாது. உலகமயமாதல் சூழலில் உலகின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவதானிக்கின்ற, அல்லது தட்டிக் கேட்கக்கூடிய காலம் ஒன்றிலேயே நாம் பலவந்தமாக இன்னொரு வாழ்க்கையில் அமிழ்த்தப்படுகிறோம். அப்படியெனில் இலங்கை எத்தகைய மனித



காங்கேசன்துறையில் சைவ ஆலயத்திற்கு முன்பாக கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரை

உரிமை மீறல்களைக் கொண்ட நாடு? இந்த அதிர்ச்சி எவரையும் உறுத்தவில்லை என்பதுதான் உலகின் வியப்பு.

எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்கள் என்பதையும் உரிமையிலும் கண்ணியத்திலும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர்கள் என்றும் ஐ.நாவின் மனித உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மனிதனுக்குமான வாழ்தலை வலியுறுத்தும் இந்த நாள் இனம், மதம், நாடு, மொழி, பால், சாதி போன்ற ஏற்றத்தாழ்வுகளற்ற ரீதியில் மனிதர்கள் அவர்களுரிய சம உரிமையை உடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறது. இன்றைய நாளில் இந்த நாட்டிலும் இந்த உலகத்தாலும் ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் இனத்தின் உரிமைகளுக்கு என்ன இடம் வழங்கப்பட்டது என்பதைக் குறித்து ஆராய்வது உபயோகம் மிக்கது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களின் ஆரம்ப நிலையோ மிகவும் கடூரமானது. உண்மையில் அதன் அடிப்படையே இன மேலாதிக்கம்தான். சக மனிதர்கள்மீதான ஒடுக்குமுறை பாரிய குற்றமாக உலகில் கருதப்படுகின்றது. மனிதர்களுக்கிடையிலான சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறை, சிறுவர்கள், பெண்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் மீறல்கள் குறித்தெல்லாம் உலகில் நன்றாகப் பேசப்படுகின்றது. மனித உரிமை அவைகளை நடாத்துவதற்கும் வருடாந்தம் அவைகள் பற்றி உரையாற்றுவதற்கும் உலக மனித உரிமைகள் தினத்தை நினைவு கூர்வதற்குமான தேவைகளும் உள்ளடங்களுங்களும் உலகில் தொடர்ந்தும் வாய்த்து வருகின்றன.

ஆனால் மெய்யாகவே அந்த மீறல்களை தடுக்கும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உலகில் உள்ள நாடுகளின் அரசுகள்மீது பணிப்பதற்குத்தான் இயலாமல் இருக்கின்றன. இலங்கையில் ஒரு சிறுபான்மை இனம் இன்னொரு பெரும்பான்மை இனத்தால் ஒடுக்கப்படுகின்றது. இது இன உரிமை மீறல். இது இன உரிமை மறுப்பு.

ஆனால் இதனை ஒரு மனித உரிமை மீறல் என்பதை ஏற்றுக் கொள்வதற்கே 30 ஆண்டுகள் இந்த உலகிற்கு தேவைப்பட்டுள்ளன என்றால் இந்த உலகம் எவ்வளவு அபத்தமானது? பல இலட்சம் மக்களின் உயிர்களை காவு கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டது என்பது எவ்வளவு கொடூரமான விசயம். ஒரு கொடும்போரின் இறுதி நாட்களில் மாத்திரம் ஒன்றரை லட்சம் மக்களை பலிகொடுக்க வேண்டி ஏற்பட்டதே?

உண்மையில் இதுதான் உலகின் மனித உரிமை குறித்த சிரத்தைதளாக இருக்கிறது. இதுதான் உலகின் உண்மையான நிலவரமாக இருக்கின்றது. ஈழத்தில் மாத்திரமல்ல, ருவாண்டா இனப்படுகொலை, குர்து இனப்படுகொலை, ஆர்மோனியன் இனப்படுகொலை என்று உலகில் நிகழ்ந்தேறிய எல்லா இனப்படுகொலைகளின் போதும் மனித உரிமை என்ற வார்த்தைகள் சாதாரணமாகக்கூட உபயோகிக்கப்பட்டு, அவை தடுத்து நிறுத்தப்படவில்லை. அதனை

மனித உரிமை மீறல்களாக ஏற்றுக்கொள்ளவும், இனப்படுகொலைகளாக ஏற்றுக்கொள்ளவும் வெகுகாலம் எடுத்தது. இந்த மக்களின் இனப்படுகொலைக் கல்லறைகள்மீது வெள்ளையும் அடிக்கப்பட்டது. உலகின் அரசியல் தேவைகளின் பிரகாரங்களின்படியே தீர்ப்புக்கள் காலம் தாழ்ந்து கிடைத்தன. இலங்கை விடயத்தில் ஐ.நா மிகவும் தோற்றுப் போயிருந்தது. இதனை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள், இந்நாள் செயலாளர் நாயகங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐ.நா அதிகாரிகள் இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். காலம் கடந்த இந்த ஒப்புதல்களும் வருத்தங்களும் இந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தவறியிருக்கின்றன. இரண்டாம் உலகப் போரின் பேரழிவின் பின்னர், உலகின் வல்லரசு நாடுககளின் பாதுகாப்பைத்தான் இத்தகைய தினங்கள் உறுதிப்படுத்த முயலுகின்றன. ஒடுக்கப்பட்ட இனங்களும் சிறுபான்மை இனங்களும் உலகின் ஆதிக்க நாடுகளினாலும், அதன் அரசியல் கூட்டு நாடுகளினாலும் உரிமை இழப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதனை நியாயப்படுத்தவும் அவர்களின் அரசியலுக்கும் தான் இவை உபயோகப்படுகின்றன. இலங்கைத் தீவில் தொடரும் இன உரிமையும் இப்படி ஒரு கணக்கிலேயே தொடர்கின்றது. ஒரு சிறு இனத்தின் பல்லாயிரம் போராளிகள் ஆயுதம் ஏந்தி மடிந்து போனதின் அரசியல் உண்மையை புரிந்துகொள்வது அவ்வளவு கடினமானதல்ல. உலகெங்கும் அதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. தன்னுடைய மொழியை, தன்னுடைய நிலத்தை, தன்னுடைய அடையாளத்தை, தன் சக மனிதர்களை அழிப்ப வர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்குகிற நிலமை வருகின்றது எனில் அங்கு மனித உரிமை மீறல் என்பது எந்தளவுக்கு முற்றிப் போன பிரச்சினையாக மாறியிருக்கிறது என்பதை வல்லுனர்கள் அறியாதவர்களல்ல. இத்தகைய தினங்களுக்கும் இதனை கொண்டாடுகிற அமைப்புக்களின் கணக்குகளில் ஏன் இவை உள்ளடங்கவில்லை?

ஈழத்தில் மிகக் கொடிய இனப்படுகொலை நடைபெற்று பத்து ஆண்டுகள் ஆகப் போகின்றன. போரில் படு பயங்கரமாக ஒரு இன அழிப்பின் அத்தனை நோக்குகளு டனும் கொல்லப்பட்ட மக்கள் குறித்து எந்த நீதியும் இல்லை. மக்கள் கொல்லப்ப ட்டார்கள் என்பதை ஏற்கவும் அந்த மக்களுக்காக ஒரு விளக்கினை ஏற்றவும், அவர்களுக்காக அழவும்கூட இங்கு உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இதனைக்கூட இந்த உலகும், இத்தினங்களும் இதுசார் அமைப்புக்களும் கண்டுகொள்ளவில்லை. இறுதியில் ஈழ இனப்படுகொலை குற்றங்களிலிருந்து தப்பிக் கொள்ளும் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்படாத நிலையில் கள்ள மௌனத்துடன் இணங்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக இனப்படுகொலைப் போரின்போதும், அதற்குப் பிந்தைய சில வருடங்களிலும் மனித உரிமை விடயம் குறித்து எந்தக் கேள்வியும் எழவில்லை. பின்னர் உலக அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப பேசப்பட்டது. ஆனால் மகிந்தவின் ஆட்சி முடிவுற்ற பின்னர், மைத்திரி — ரணில் ஆட்சிக் காலத்தில் ஈழப்படுகொலை விவகாரங்கள்மீது மெல்ல மெல்ல வெள்ளையடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போதும் மகிந்த ராஜபக்ச ஆட்சியை மீளக் கைப்பற்றினால் ஈழ இனப்படுகொலை விவகாரங்கள் தூசி தட்டி எடுக்கலாம் என்று மிரட்டல்கள் விடுவிக்கப்படுகின்றன.

மைத்திரிபால சிறிசேன ஆட்சி ஏற்பட்டு இலங்கையில் நான்கு ஆண்டுகள் நிறைவ டையப் போகின்றன. போரில் கொல்லப்பட்டவர்கள் குறித்து எந்த சொற்களையும் இவர் இதுநாள்வரை பேசியதில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பல நூறு நாட்களாக ஈழ வீதிளில் நின்று போராடுகிறார்கள். இன்னமும் போராடுகிறார்கள். அவர்களின் மர்மம் குறித்து மைத்திரி எந்தப் பதிலையும் பேசவில்லை. ஆனால், மகிந்த ராஜபக்சவை மின்சாரக் கதிரையிலிருந்து காப்பாற்ற விட்டேன் என்கிறார். தனது இராணுவப் படைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலிருந்து காப்பாற்றி விட்டேன் என்கிறார். அத்தகைய மைத்திரியை உலகம் மயிலிறகால் தடவியது. ஒரு மனிதரின் உரிமை குறித்துப் பேசும் சாசனங்கள், ஒரு இனத்தின் பகுதியினரே இல்லாமல் போயிருப்பதை குறித்து பேசாமல் இருப்பது ஏன்? அவர்கள் மிகவும் கொடூரமான வழிகளில் கொல்லப்பட்டமை குறித்தும் காணாமல் ஆக்கபட்டமை குறித்தும் அவர்களின் வாழ் நிலங்கள் பறிக்கப்பட்டமை குறித்தும் பேசாதிருப்பது ஏன்? உலகின் இந்த வஞ்சகங்களிற்கும் இலங்கையில் காணப்படும் இனப் பாரபட்சங் களுக்கும் இடையில் ஒரு வேறுபாடும் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை போன்றவை இந்த உரிமை மீறல்களை ஊக்குவிக்கின்றன. இத்தனை உலகப் பேரழிவுகளின் பின்னரும் தரவுகளை மதிப்படும் ஒரு சபையாக, ஈறுகளில் வருத்தம் தெரிவிக்கும் ஒரு அமைப்பாக ஐ.நா தேவை தானா?

ஆனாலும் நாம் இரத்தமும் சதையுமாக அனுபவித்த கதைகளை இவ் உலகிற்கு கையளிக்க வேண்டிய தேவையில் இருக்கிறோம். எங்களுக்கு நேர்ந்த இந்தக் கதி உலகில் எந்த இனத்திற்கும் நேரக்கூடாது. உலகில் உள்ள மக்களின் உனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். எந்த இனமும் எங்களைப் போல அழிந்துபோகக் கூடாது. ஒடுக்கப்படக்கூடாது. அரசெனப்படுவது மக்களை பாதுகாக்கவும், அந்த மக்களை இறைமையைப் பெற்று ஆள்வதும் என்பதும் எங்கள் நாட்டில் எங்கள் விடயத்தில் எத்தனை அர்த்தமற்றது? எங்கள் அரசே எங்களை கொலை செய்தது.

இலங்கை நாடாளுமன்றத்தில் கத்தியுடன் உறுப்பினர்



உலகின் பாதுகாப்பு விதிகளும் இனப் படுகொலை செய்யப்பட்ட எங்கள் குருதியை கழுவுகின்றன. இத்தகைய விதிகள் திருத்தப்பட வேண்டும்.

எங்கள் இழப்பும் சிந்திய குருதியும் உலகில் எவரும் இக்கதி ஏற்படாத நிலையொன்றை வலுவாக்க புதிய சாசனத்தை எழுத வேண்டும். இத்தகைய தினங்கள் அர்ததமற்றுப் போகலாம். மனித உரிமைப் பிரகடனம் வெறும் காகித்தில் நினைவுகூரப்படலாம்.

ஆனால் மனித உரிமைக்கும் இன அழிப்பு மீறலுக்கும் ஆளாகிய நாம் அதன் வலிகளைப் பேச வேண்டும். இந்த தினத்தில் உலகிற்கு அதை உணர்த்த வேண்டும். உலகின் அத்தனை ஒடுக்கப்பட்ட, மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்காகவும் குரல் கொடுக்கவேண்டும். இந்த நாள் உண்மையிலேயே அர்த்தம் பெற வேண்டும். பெறும்.



மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து

## நான் புதைக்கப்பட்டவன் அல்ல...
# விதைக்கப்பட்டவன்..

கௌதமணி

நான் காதலித்த மண்ணில்
களவாய். புதைக்கப்பட்டவன்.
இருட்டில் என்னை
இழுத்துச் சென்றவன்
நான் இறந்தேனா..
இல்லையா என்று கூட
பார்க்கத் தெரியாமல்
வெட்டிய குழிக்குள் என்னை..
எட்டியே தள்ளினான்...

என் கால்களும் அதைக் கட்டிய..
கைவிலங்கையுமே...
கண்டுபிடுத்துள்ளீர்கள்...

என் முகத்தையும் கண்டுபிடித்து..
உலகறியச் செய்யுங்கள்...
பிரபலமாவதற்கு அல்ல...

சித்தப் பிரம்மை பிடித்து...
தெருத்துருவாய் என்னைத் தேடி.
அலையும் என்னைப் பெற்ற..
தேவதை அறிந்து கொண்டு..
தன் ஆயுள்..முடிக்கட்டும்..
என்பதற்காக...

என்னோடு பள்ளிக் குழந்தைகள் உட்பட...
பச்சிளம் பாலகர்களும் பல்லுப் போன...
படையில் போவதற்கு...தயாராய்...
இருந்தவர்களும் அடங்குவார்..

ஏன் எதற்கு என்று தெரியாமல் ..
புதைக்கப்பட்டவர்கள்....நாங்கள்...

இப்போ மண்ணுக்கு நோகாமல் ..
எண்ணிக்கையில் தேடிக்
கொண்டிருக்கும் தேசம்..இது

காணாமல் ஆக்கப்பட்டவர்களை...
கண்டு பிடிக்கும் பொறிமுறை ..
எதுவென்று இப்போநது. இதை..
பார்த்தவர்களுக்கு புரிந்திருக்கும்

எண்ணிக்கையைத் தேட
வெளிக்கிட்டவர்களே
இதைச் சொல்லட்டும்.....

நாங்கள் புதைக்கப்படும் போது..
இரு மொழிகளும் எங்களை ..
இனங்காட்டியது....
மும்மதங்களும் மௌனம் காத்தது..
எங்களில் பல பேர் ....
ஒலிபெருக்கியில் சொல்லப்பட்டதை..
உண்மை என..நம்பி...
ஒப்படைக்கப்பட்டவர்கள்
மட்டுமல்ல...தாமாக..முன்வந்து..
ஒதுங்கியவர்களும் அடங்கும்.

என் கால்களுக்கு விலங்கிடப்பட்டதால் -
என்
காலைக் கடன்களும் முடியவில்லை..
என் தாயின் கடமைகளையும்
முடிக்கவில்லை...

8ம் பக்க தொடர்ச்சி

மறுத்ததின் காரணமாகவே நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு காரணம் என்று ஜனாதிபதி மைத்திரியும் இவரை இந்த பதவியில் அமர்த்துவதற்கு அரும்பாடுபட்டு அதற்குப் பிரதியுபகாரமாக பிரதமர் பதவியைப் பெற்றுக்கொண்ட ரணிலும் பகிரங்கமாகத் தெரிவித்த பின்னரும் இதனை நிவர்த்திப்பதற்கு அவர்கள் எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தங்களது தவறை ஏற்றுக்கொண்ட மேற்படி இரண்டு தலைவர்களும் தமிழ் மக்களுக்கு எத்தகைய உரிமைகளையும் வழங்கப்போவதில்லை என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் எனது சடலத்தின்மீதுதான் வடக்கு—கிழக்கு இணைப்பும் சமஷ்டியும் சாத்தியமாகும் என்று கூறியுள்ளார். அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கப்போவதில்லை என்றே கூறியுள்ளார்.

எந்த அடிப்படையில் சர்வதேச சமூகம் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரியையும், அவரோடு தோளோடு தோள்நின்ற ரணிலையும் ஆதரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரியது? அன்றைய கூட்டமைப்பின் நிலை ஒரு பரிதாபரமானது என்பதை ஏற்றுக்கொண்டாலும் தான் வழங்கிய ஒத்துழைப்பிற்கு அர்த்தம் கொடுக்கும்படி அது சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது என்று கூறி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளை நீர்த்துப் போகச் செய்து அந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கதையும் இணை அனுசரணை வழங்கச் செய்து இலங்கையின் ஆளும் வர்க்கத்தைக் காப்பாற்றுவதில் தமிழ் ஆளும் வர்க்கத்தின் முகவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முனைப்புடன் செயற்பட்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 30ஃ1 தீர்மானத்திற்கு அமைவாக நிலைமாறுகால நீதிப் பொறிமுறையானது (1) உண்மையைக் கண்டறிதல் (2) பொறுப்புக்கூறல் (3) நட்டஈடு வழங்குதல் (4) மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் என்னும் நான்கு தூண்களின்மீது கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

ஒரு கலப்புப்பொறிமுறையினூடாக யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்திருக்கிறதா என்பதை விசாரித்து ஐ.நா சபைக்கு அறிக்கையிடல் என்ற விடயமும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கமும் அதனை ஏற்றுக்கொண்டிருந்தது. கூட்டம் முடிவடைந்த உடனேயே இலங்கையின் ஆளும் வர்க்கம் தமது உறுதிமொழியை வழக்கம்போல் தானே மீறியது. வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறியது. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் இருக்கிறது. அதற்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று ஜனாதிபதியும் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதிலளித்திருந்தனர்.



இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதில் காத்திரமான பங்களிப்பைச் செலுத்தியிருந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தானே இந்தத் தீர்மானம் வருவதற்குக் காரணம் என்றும் கொண்டுவரப்படுகின்ற தீர்மானம் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்ததுடன் இலங்கை அரசாங்கம் இதனைக்கூட 99வீதம் நடைமுறைப்படுத்தாது என்பது எமக்குத் தெரியும், ஆனால், அந்த ஒரு வீத நம்பிக்கையை எப்படி 100வீதமாக மாற்றுவது என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும் என்றும் இப்பொழுது இலங்கை சர்வதேசத்தின் அவதானிப்பில் சிக்குண்டுள்ளது என்றும் இதில் தோல்வியுற்றால் அந்தத் தோல்வியைத் தாம் பொறுப்பேற்பதாகவும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஒரு அலுவலகத்தை நிறுவ முன்வந்தது. தமிழ் மக்களின் காணிகள் சிறுகச் சிறுக விடுவிக்கப்பட்டன. மக்கள் நாடுமுழுவதும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவசரகால சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரும், போர் முடிவிற்கு வந்தவுடனும் இவைகள் இயல்பாக நடைபெற்றிருக்க வேண்டியவை என்பது இங்கு மனங்கொள்ளத் தக்கது.

30ஃ1 தீர்மானத்தில் குறிப்பிட்ட விடயங்கள் சொல்லத்தக்க வகையில் நிறைவேற்றப்படாத நிலையில், 2017ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் தனது அழுத்தத்தை முறையாகப் பிரயோகித்து இலங்கை அரசாங்கம் செய்யத் தவறிய விடயங்களையும் தாங்கள் இறங்கி வந்த அளவிற்கு இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமாகச் செயற்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி ஒரு நேரசூசியின் அடிப்படையில் கருமங்கள் நடைபெற வேண்டும் அதனை சர்வதேச சமூகமும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகமும் கண்காணிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட காலக்கிரமத்தில் நடைபெறாத காரியங்களைச் சுட்டிக்காட்டி அதனை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கோருவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிவிட்டது.

மேலும் ஒருபடி மேலே சென்று, இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தனது அங்கத்துவக் கட்சிகளின் வடக்கு—கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர்களின் கையெழுத்தைப் பெற்று 30ஃ1 தீர்மானத்தில் எத்தகைய மாற்றங்களையும் மேற்கொள்ளாமல் அதையே 34ஃ1 தீர்மானமாக நிறைவேற்றி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் இரண்டாண்டு கால அவகாசம் வழங்குவதற்கு தனது ஆதரவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. இதற்கு அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்திடுவதற்கு மறுத்துவிட்டது. தமிழ் மக்களும் அவர்கள் மத்தியில் செயற்படும் சிவில் அமைப்புகளும்கூட கூட்டமைப்பின் முடிவிற்கு தமது எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். 2017ஆம் ஆண்டு வழங்கிய காலநீட்டிப்பிற்கு அடுத்த இரண்டு மாதங்களில் புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கை வரவுள்ளது. அதில் ஈழம் என்ற வார்த்தையைத் தவிர அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும். எனவே இன்று நாம் எதிர்ப்பு தெரிவித்தால் அது புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கையைப் பாதிக்கும் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாறுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். அங்கத்துவக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் அவரது கூற்றை ஆதரித்தனர். ஆனால் 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எந்த அளவிற்கு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது என்பதை அனைத்துத் தமிழ்ச் சமூகமும் உணர்ந்துகொண்டது.



இலங்கையின் இன்றைய அரசியல் சூழலில் தற்போதைக்கு ஒருபுதிய அரசியல் யாப்பிற்கான சாத்தியம் இல்லை என்பதை இதற்காக முனைப்புடன் செயற்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளரே தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை சட்ட காரணங்களைக் காட்டி தனது இயலாத் தன்மையை வெளியிட்டிருந்த கூட்டமைப்பின் தலைவர், தற்பொழுது அவர்களின் விடுதலை அரசாங்கத்தின் அரசியல் கொள்கை மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். காணிகளை விடுவிக்கக்கோரியும் வடக்கு—கிழக்கில் பல்வேறு காரணங்களை முன்வைத்து திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பையும் அதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் இராணுவத்தினரின் பிரசன்னங்களையும் கைவிடுமாறு கோரி, தமிழ் மக்கள் இரண்டாண்டுகளாக வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் நிர்மாணிக்கப்படுவதற்கும், அதன் பணிகளை முன்னெடுக்கப்படுவதற்கும் பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற ஒரே காரணத்தை முன்வைத்து 2018ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த அலுவலகத்தினால் எத்தகைய பணிகளும் நிறைவேறவில்லை என்பதையும் எமது மக்கள் தமக்கான நீதிகோரி இரண்டாண்டுகளாக வீதியில் உள்ளனர் எனப்தையும் நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையும் காரணம் என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கத் தவறியுள்ளனர்.

தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான நியாயமான ஆயுதப்போராட்டமும் மௌனிக்கச் செய்யப்பட்டு மிதவாத அரசியல் தலைமையும் ஆளுமையின்றி இருக்கையில் தமி;ழ்த் தேசிய இனம் தமது உரிமைகளையும் நீதியையும் நியாயத்தையும் சர்வதேச சமூகமும் ஐ.நா.சபையும் பெற்றுக்கொடுக்கும் என்று தமது நம்பிக்கையை வழக்கம்போலவே தமது தலைவர்களிடமிருந்து சர்வதேச சமூகத்தின்பால் மாற்றியுள்ளனர். இந்த மனித உரிமைகள் தினத்தில் அவர்களின் நம்பிக்கை காப்பாற்றப்படுமா? வழக்கம்போல் காற்றில் பறக்க விடப்படுமா?

# 7 பேர் விடுதலையை வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமைக் கட்சி உண்ணாவிரதம்

## அற்புதம் அம்மாள் பங்கேற்பு




பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை குறித்த தமிழக அமைச்சரவை தீர்மானத்தை ஆளுநர் அவர்கள் உடனே நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் ஏழு பேர் பங்கேற்கும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி அளிக்க மறுத்து, ஒருநாள் மட்டும் ஏழு பேர் பங்கேற்கும் உண்ணாவிரதத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி 7 பேர் பங்கேற்கும் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டமானது(07/12/2018) வெள்ளியன்று காலை முதல் மாலை வரை பேரறிவாளன் அவர்களின் தாயார் அற்புதம் அம்மாள் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்றது. விரைவில் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக போராட்டத்தில் உரையாற்றிய தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# நான் நினைத்தால் ஆட்சி கவிழும் இந்திய அரசுக்கு சுப்பிரமணியசாமி எச்சரிக்கை



இந்திய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்துவதை தனது முழுநேர பணியாகக் கொண்டிருப்பவர் பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களின் ஒருவரான சுப்பிரமணியசாமி. இராமர் கோவில் கட்டுவது குறித்து ஊடகம் ஒன்றிக்கு பேட்டி அளிக்கையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய அரசு மற்றும் உத்தரப் பிரதேச அரசு என்னுடைய எதிர்க்கட்சிகள் என்னை எதிர்த்தால் பா.ஜ.க. தோல்வி அடையும். மத்திய அரசிற்கும் உத்தரப் பிரதேச அரசிற்கும் என்னை எதிர்க்கும் துணிச்சல் இருக்கிறதா அவர்களுக்கு அதற்கான பலமும் தைரியமும் கிடையாது. என்று கூறினார்.

மேலும் தொடர்ந்து பாஜக என்னை எதிர்க்கத் துணிந்தால் அவர்களின் ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்க மாட்டேன். நான் நினைத்தால் பா.ஜ.க ஆட்சி இப்போதே கவிழும் என்று குறிப்பிட்டு இருக்கிறார். பாஜக கட்சியில் இருந்துகொண்டே அவர் இப்படிப் பேட்டியளித்து இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அயோத்தியில் இராமர் கோவில் கட்ட சட்டம் கொண்டுவர வலியுறுத்தி 50,000 பேர் திரண்டனர்

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கு இந்திய நாடாளுமன்றத்தில் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்று டெல்லி இராம் லீலா மைதானத்தில் விஷ்வ இந்து பரிஷத்தால் கூட்டம் இன்று நடைபெற்றது. இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்குவதற்கு சில தினங்களே இருக்கும் நிலையில் இந்த கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் சுமார் 50ஆயிரம் பேர் பங்கு கொண்டனர். இவர்களின் முக்கிய கோரிக்கை அயோத்தியில் இராமர் கோவில் கட்ட நாடாளுமன்றத்தில் சிறப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதே. இதில் விஷ்வ இந்து பரிஷத் உட்பட பல இந்து அமைப்புகளை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.



# ஆணவப் படுகொலை செய்யப்பட்ட உடுமலை சங்கரின் மனைவி கவுசல்யா மறுமணம்

தமிழ்நாட்டில் கவுசல்யா, சங்கர் சாதி மறுப்பு திருமணம் செய்கொண்டதால் கௌசல்யாவின் குடும்பத்தினரால் சங்கர் 2016ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி உட்பட 6 பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

சங்கர் படுகொலைக்கு பின்னர் கவுசல்யா தனது கணவர் பெயரில் சமூகநீதி அறக்கட்டளை நடத்திவந்ததுடன் சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக போராடி வந்தார். மேலும் ஒடுக்கப்படும் பெண்களுக்காகவும் குரல் கொடுத்து வந்தார். இந்நிலையில் இன்று கோவை வெள்ளூரைச் சேர்ந்த பறை இசைக் கலைஞர் சக்தி (27) என்பவரை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தந்தை பெரியார் திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலாளர் கு.ராமகிருட்டிணன் ஆகியோர் முன்னிலையில் கௌசல்யா மறுமணம் செய்துகொண்டார். இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னிஅரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வைகோ மீது வழக்கு

தமிழ்நாடு கவர்னர் மாளிகை முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட வைகோ உள்பட 684 பேர் மீதும் அனுமதியின்றி சட்ட விரோதமாக கூடுதல், தடை உத்தரவை மீறி போராட்டத்தில் ஈடுபடுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் கிண்டி போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர்.


பேரறிவாளன் உள்பட 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தி ம.தி.மு.க. சார்பில் கடந்த 3—ந்தேதி கிண்டி கவர்னர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பல்வேறு கட்சித்தலைவர்கள் பங்கேற்றனர். இந்த போராட்டத்துக்கு போலீசார் அனுமதி வழங்கவில்லை. இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட வைகோ உட்பட 684 பேர் மீதும் அனுமதியின்றி சட்ட விரோதமாக கூடுதல், தடை உத்தரவை மீறி போராட்டத்தில் ஈடுபடுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் தமிழக போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர்

# கனிமொழிக்கு 2018ம் ஆண்டுக்கான இந்திய நாடாளுமன்ற சிறந்த பெண் உறுப்பினருக்கான விருது

கனிமொழிக்கு 2018ம் ஆண்டுக்கான இந்திய நாடாளுமன்ற சிறந்த பெண் உறுப்பினருக்கான விருது அளிக்கப்பட்டுள்ளது. கனிமொழியின் நாடாளுமன்ற செயற்பாடுகள் மற்றவர்களுக்கு ஊக்கமாகவும் ஜனநாயகத்தை வலுப்படுத்த உந்து சக்தியாகவும் திகழ்வதாக தெரிவித்து பத்துப் பேர் கொண்ட மூத்த நாடாளுமன்ற குழு தேர்ந்தெடுத்துள்ளது. இவ்விருதினை டெல்லியின் வருகிற 13ந் திகதி துணை ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழிக்கு வழங்கவுள்ளார்.

# சிட்டுக்குருவிகளும் சங்கரின் 2.0 திரைப்படமும்


சின்னஞ்சிறியப் பறவையான சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை விவசாய நாடான இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே குறைந்து வருகிறது. இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கடந்த 2010—ம் ஆண்டு முதல் மார்ச் 20ஆம் தேதி உலக சிட்டுக்குருவிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சிட்டுக்குருவிகளைப்பற்றி இங்கிலாந்தில் 1940களிலிருந்து இன்றுவரை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல பறவையியலாளர்கள் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அங்குள்ள சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையை பல ஆண்டுகளாக கணக்கெடுத்து வருகின்றனர். ஒரு காலத்தில் பல இடங்களில் பரவியிருந்த சிட்டுக்குருவியை 2002ம் ஆண்டு அந்நாட்டில் அழிவின் விளிம்பில் இருக்கும் பறவைகளின் பட்டியலில் அறிவியலாளர்கள் சேர்த்துவிட்டனர். சிட்டுகுருவிகளின் எண்ணிக்கை நகரப்பகுதிகளிலிருந்து முன்பு இருந்ததைக்காட்டிலும் சுமார் 90% வீழ்ச்சியடைந்துவிட்டதாக பலகாலமாக நடத்தப்பட்டுவரும் ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரியவந்தது.



வீட்டுச் செல்லப்பிராணியாக வளர்க் கப்படும் பூனைகளும், நகரிலுள்ள காகங்களும் இவற்றை இரையாகக்கொள்வது, சிட்டுக் குருவிகள் கூடுகட்ட ஏதுவான பல புதர்ச் செடிகள் கொண்ட தோட்டங்கள் இல்லாமை, இனப்பெருக்க காலங்களில் குஞ்சுகளுக்குத் தேவையான பூச்சிகள் இல்லாமல் போவதால் ஏற்படும் உயிரிழப்பு போன்றவை காரணங்களாக இருக்கலாம் என்று பரவலாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்ற்றில் ஏதாவது ஒன்று மட்டுமே காரணமாக இல்லாமல் இவை அனைத்தும் ஒருங்கே சேர்வதால் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறையும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவும் அறியப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் சிட்டுக்குருவிகள் பல இடங்களில் அழிந்து வருவதைக்கண்டு அது இந்தியாவிற்கும் பொருந்தும் என நினைத்து அங்கும் அவற்றின் இனம் அழியாமலிருக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இந்நிலையில் சங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான படம் 2.0. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே பிரம்மாண்ட நிதிச் செலவில் உருவாகி இருக்கும் இந்தப் படம் செல்போன்கள், செல்போன் டவர்கள் சுற்றுச்சூழலுக்கு விளைவித்திருக்கும் மாற்றத்தைப் பற்றி கருத்து தெரிவிக்கிறது. உலகில் ஒவ்வொருவரின் கையிலும் கையடக்கத் தொலைபேசி தவழ்கின்றன. 2ஜியில் தொடங்கி 5ஜி தொழில்நுட்பம் வரை நவீன இணைய வசதிகள் அனைத்தும் மக்களைச் சென்றடைந்துள்ளன. தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் போட்டி போட்டு, மக்களுக்கு சேவைகளைக் விரைவாகக் குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகின்றன.

தொலைபேசிகள் பயன்பாட்டுக்கு வந்த போது, அதில் இருந்து வெளியாகும் கதிர் வீச்சு புற்றுநோயை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்தனர். அதுபோல தொலைபேசி டவர்களில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு மனித உடலிலும், பிற உயிர்களையும் தாக்குகிறது என உலகம் முழுவதும் புகார்கள் எழுந்தன. முதலில் சிட்டுக்குருவிகள் முதலிய பறவைகளின் அழிவுக்கும், தொலைபேசி டவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறப்பட்டது. ஆனால் பின்னர் நடந்த ஆராய்ச்சிகளில் செல்போன் டவர்களால் பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படுவது உறுதிப் படுத்தப்பட்டது. பெரும்பாலான ஆய்வுகளின் முடிவுகள், தொலைபேசி டவர்கள் இருக்கும் இடங்களில் பறவைகளின் எண்ணிக்கை குறைவடைவது உண்மை தான் எனக் கூறின. ஆனால் பறவைகளின் எண்ணிக்கை குறைவதற்கு, தொலைபேசி டவர்கள் மட்டுமே காரணம் என்று எந்த ஆய்வும் இதுவரை உறுதிசெய்யவில்லை. மக்களிடையே பரவலாகப் பயன்பாட்டில் இருக்கும் பூச்சிக்கொல்லிகள், மரங்கள் வெட்டப்படுதல், மற்ற சுற்றுச்சூழல் மாசுப் பிரச்னைகள் முதலியனவும் பறவைகள் அழிவதற்குக் காரணங்களாக அமைவதால் ஆய்வுகளில் சரியான தீர்வை எட்ட முடியவில்லை.

தொலைபேசி டவர்கள் வெளிப்படுத்தும் கதிர்வீச்சால், பெரிதும் பாதிக்கப்படுபவை சிட்டுக்குருவிகளும், தேனீக்களும் தான். நாடுகள் கடந்து பறக்கும் பறவைகள் செல்போன் டவர் கதிர்வீச்சால், திசை தெரியாமல் பயணித்து இறக்கின்றன என



அமெரிக்காவில் ஆய்வு முடிவு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. தேனீக்கள் கூட்டமாக வாழும் வழக்கமுடையவை. தேன் சேகரிக்கச் செல்லும் தேனீக்கள், கதிர்வீச்சு பாதிப்பிற்குள்ளாகி, மீண்டும் கூட்டுக்குத் திரும்ப முடியாத சூழல் உருவாகிறது. இது கூட்டமாக வாழும் தேனீக்களின் இயல்பைச் சிதைக்கிறது. பறவைகளின் முட்டைகள் கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்டால், கருச் சிதைவுக்கு உள்ளாகின்றன என்பதையும் மத்திய சுற்றுச்சூழல் துறையின் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தின. இந்த செய்திகளை

**தொலைபேசி டவர்கள் வெளிப்படுத்தும் கதிர்வீச்சால் சிட்டுக்குருவிகள் மட்டுமல்ல தேனீக்களும்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றன.**

பற்றித்தான் 2.0 படத்தில் பேசப்படுகிறது.

2.0 திரைப்படம் வெளியாவதற்கு முன், செல்போன்களைத் தவறாகச் சித்திரிப்பதாக செல்போன் நிறுவனங்களின் இயக்குனர்கள் சங்கத்தினர் தணிக்கைத் துறையிடம் புகார் அளித்தனர். ஆனால் இந்த சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கும் முன்னணி நிறுவனங்கள் கடந்த 2015—ம் ஆண்டு மொத்தமாக ரூ.10.80 கோடி பணத்தை அனுமதிக்கப்பட்ட கதிர்வீச்சு அளவை விட அதிகமாக வைத்ததால் அபராதமாக அளித்துள்ளன. 2.0 படத்தில்



இந்த அதிக கதிர்வீச்சு அபாயம் பற்றியும் அலசப்பட்டுள்ளது. இந்தியாவில் மொத்தம் 4.64 லட்சம் செல்போன் டவர்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 39 ஆயிரம் டவர்கள் உள்ளன.

இந்தஎண்ணிக்கையில் உத்தரபிரதேசத்துக்கு அடுத்து 2 ஆம் இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. செல்போன் டவர் கதிவீச்சால் பறவைகளால் அதிக தொலைவு பறக்க முடியாது. பறவைகளின் திசையறியும் திறன் குறைகிறது. கூடுகள் உருவாக்கும் திறன் அழிகிறது. செல்போன் டவர்கள் பறவை இனத்துக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் புற்றுநோய் முதலான நோய்களை உருவாக்க கூடியவை என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். செல்போன் பயன்பாட்டை குறைப்பதே இதற்கான தீர்வாக அமையும்



# மக்கள் போராட்டத்தால் திணறும் பிரான்ஸ் அரசாங்கம்



எரிபொருட்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து பிரான்ஸ் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வந்த நிலையில் தற்போது போராட்டம் மிகவும் தீவிரமடைந்துள்ளது. 1லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த போராட்டத்தில் இதுவரை 1726 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பல போராட்டக்காரர்கள் உட்பட 7 பொலீஸ் அதிகாரிகள் படுகாயமடைந்துள்ளதாகவும் அதிகளவு சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

‘மஞ்சள் ஜாக்கட்’ என்று அழைக்கப்படும் இந்தப் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பிரான்ஸ அரசாங்கம் திணறிவருகிறது. இப் போராட்டம் எரிபொருளுக்கு எதிராகத் தொடங்கப் பட்டபோதிலும் அதிதீவிர வன்முறையாளர்களால் கையிலெடுக்கப்



பட்டுள்ளதாக பிரான்ஸ் அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். பல வருடங்களாக பாரிஸ் நகரம் இதுபோன்ற மாபெரும் மக்கள் போராட்டத்தை கண்டதில்லை என சர்வதேச அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இப்போராட்டத்தின்போது கண்ணீர் புகைக் குண்டுகள் வீசியதும் தடியடி நடத்தியதும் மக்களைக் கொந்தளிக்கச் செய்துள்ளது. இது வரலாற்றில் இல்லாத வகையில் பிரான்ஸ் காவல்துறை சக்திவாய்ந்த கண்ணீர் புகைக்குண்டுகளைப் பாவித்ததாக அங்குள்ள சர்வதேச செய்தியாளர்கள் தெரிவித்துள்ளார். போராட்டங்களை அடக்குவதற்காகவும் பாரிஸ் நகரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் 90000ற்கும் அதிகமான காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். பாரிஸ் நகரில் மட்டும் ஏறத்தாழ 8000 அதிகாரிகள் மற்றும் 12 கலவரத் தடுப்பு வாகனங்கள் நிறுதப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை ஏற்று பிரான்ஸ் அரசு எரிபொருட்களின் வரி உயர்வைத் தடுப்பதாக உறுதியளித்துள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டுக்கான மின்சாரம் மற்றும் எரிவாயுக்கான விலையை நிர்ணயித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் போராட்டம் மேலும் பல காரணங்களுக்காக விரிவடைந்து வருகிறது. விலை குறைப்புகள் அனைத்துப் போராட்டக்காரர்களையும் திருப்திப்படுத்தவில்லை. சிலர் ஊதிய உயர்வு கோருகின்றனர். சிலர் வரிகளை குறைக்க விரும்புகின்றனர். சிலர் அதிகப் பென்ஷன்களைக் கோருகின்றனர். சிலர் பல்கலைக்கழக படிப்புகளுக்கான வாய்ப்புகளை எளிதாகக் கோருகின்றனர். சிலர் அதிபர் பதவி விலக வேண்டும் என்றும் கோருகின்றனர்.




## நீர்நாயின் மூக்கில் மாட்டிய கடல்மீன்: குழப்பத்தில் ஆராய்ச்சியாளர்கள்

அழிவின் விளிம்பில் இருக்கும் ஹாவாயன் மான்க் சீல் என்று அழைக்கப்படும் நீர்நாயின் மூக்கில் பாம்பு போன்ற கடல் மீன் எப்படி வந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் யோசித்து வருகின்றனர். இந்த வாரம், அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் இந்த சிறுவயது நீர்நாயின் புகைப்படத்தை வெளியிட்டிருந்தது. இந்த வகை நீர்நாயை 40 வருடங்களாக அறிவியலாளர்கள் கண்காணித்து வருகின்றனர். ஆனால் இம்மாதிரியான சூழ்நிலையை 2016 ஆண்டிலிருந்துதான் அவர்கள் காண நேர்கிறது. அனைத்து நீர்நாய்களும் பிடிப்பட்டு, மாட்டிக் கொண்ட மீன்கள் அகற்றப்பட்டுவிட்டன. இதற்கு ஆய்வாளர்கள் இரண்டு வகையான காரணங்களை சொல்கின்றனர்.

இந்த ஹாவாயன் மான்க் சீல்கள் உணவுக்காக, பவளப்பாறைகளையோ, மணலையோ, பாறையையோ தன் வாயையோ மூக்கையோ வைத்து முட்டும்போது இந்த பாம்பு போன்ற மீன் அதன் மூக்கில் மாட்டிருக்கலாம் என்றும், அந்த மீனுக்கு தப்பி செல்ல வழி இல்லாமல் அது சிக்கியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்நாய்கள் தனது உணவை கண்டுபிடித்தவுடன் அது பேரார்வத்துடன் தனது உணவை அங்கும் இங்கும் தூக்கியெறியும் பழக்கத்தையும் கொண்டவை. இருப்பினும் காரணம் எது என்று தெளிவாகவில்லை. எனவே அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம், எதிர்காலத்தில் இம்மாதிரியான சூழ்நிலைகளில் நீர்நாய்களிடம் மாட்டிக் கொள்ளும் இந்த மீன்களை பிரித்து எடுப்பது எப்படி என்ற வரைமுறைகளை வகுத்துள்ளது

## இன்று சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம்



ஐக்கிய நாடுகள் சபையினால் உலகளாவிய ரீதியில் ஊழலை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முனைப்போடு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 9ந் திகதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக அறிவிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறுது.

ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறு அறிவித்திருந்தாலும் நாடுகளில் இன்னமும் கடுமையான சட்டங்கள் இல்லாதால் ஊழல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வதாக ஊழலைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற சமூக அக்கறையுடன் பணியாற்றும் உலகளாவிய அமைப் புகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங் களும் கருத்து தெரிவிக்கின்றன.

# சிறுவர்களின் எதிர்காலத்தைச் சிதைக்கும் கையடக்கத் தொலைபேசிகள்

கையடக்கத் தொலைபேசி இல்லாத ஒரு வாழ்க்கையை கற்பனைகூட செய்யமுடியாது. அந்தளவுக்கு அது நம் வாழ்க்கையை ஆக்கிரமித்துவிட்டது. வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் செல்போனோடுதான் இருக்கிறார்கள். குறித்த நேரத்தில் சாப்பிடுவதில்லை. உறங்குவதில்லை. பல பிரச்னைகளை எதிர்கொள்கிறார்கள்.



கைப்பேசி இல்லாத ஒரு வாழ்க்கையை நம்மால் கற்பனைகூட செய்யமுடியாது. அந்தளவுக்கு அது எமது வாழ்க்கையை அது ஆக்கிரமித்துவிட்டது. குழந்தைகளும்கூட அதற்கு விதிவிலக்கல்ல. வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் கையடக்கத் தொலைபேசியோடுதான் இருக்கிறார்கள். குறித்த நேரத்தில் சாப்பிடுவதில்லை. உறங்குவதில்லை. இதனால் உடல்சோர்வு, கண்ணெரிச்சல், கல்வியில் ஆர்வமின்மை போன்ற பல்வேறு உடல், உள ரீதியானபிரச்னைகளை குழந்தைகள் எதிர்கொள்கிறார்கள். இதுமட்டுமின்றி, இதனைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு மன அழுத்தம் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. “தென்கொரியாவில் மாணவர்கள் அதிகமாக இணையத்துக்கு அடிமையானதைக் கண்டறிந்தபிறகு `போர்னோகிராபி’ தளங்களைத் தடை செய்தனர். இந்தியாவில் 'ப்ளூவேல்' என்ற விளையாட்டால் உயிரிழப்புகள் ஏற்பட்ட பிறகு, பெற்றோர் மத்தியில் விழிப்புஉணர்வு ஏற்பட்டிருக்கிறது. அது இன்னும் அதிகரிக்கவேண்டும்.

இன்றுள்ள பல 'சோஷியல் மீடியா ஆப்ஸ்கள்' எளிதில் கையாளும் வகையில் இருக்கின்றன. ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர், வாட்ஸ்அப் போன்றவற்றைப் பெற்றோர்கள் பயன்படுத்துவதைப் பார்த்து குழந்தைகளும் கற்றுக்கொள்கின்றனர். பொதுவாக, குழந்தைகளின் மனநிலை என்பது எதையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மை கொண்டது. நல்லதை விடக் கெட்டதை வேகமாகக் கற்றுக்கொள்ளவும் செய்வார்கள். ஆகவே, பெற்றோர்கள் வெளியில் சென்றிருக்கும்போதோ அல்லது வேறு ஏதாவது வேலையில் மூழ்கி இருக்கும்போதோ அவர்களுக்குத் தெரியாமல் கையடக்கத் தொலைபேசியை எடுத்து அதில் என்னவெல்லாம் இருக்கிறது என்று ஆராய்வார்கள். சில பெற்றோர்கள் தங்களுடைய செல்போனில் உள்ள 'ஆப்ஸ்'களுக்கு பாஸ்வேர்டு வைத்திருப்பார்கள். அந்த பாஸ்வேர்டை பிரேக் செய்து, உள்ளே நுழையும் அளவுக்கு சில நேரங்களில் குழந்தைகள் ஈடுபடுவார்கள். சில பாலியல் ரீதியான புகைப்படங்களையோ தகவல்களையோ படிக்கும்போது அவர்களுடைய மனநிலை பாதிப்புக்கு உள்ளாகும். நாளடைவில் அந்தமாதிரியான விஷயங்களில் ஈர்ப்பு ஏற்பட்டு, பெற்றோருக்குத் தெரியாமல் செல்போனை எடுத்து தன்னுடைய நண்பர்களிடம் காட்டும் ஆர்வமும் அவர்களுக்கு ஏற்படும். ஒரு குழந்தை மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது பள்ளியில் இருந்து வரும் புகார்கள் மூலமே தெரியவரும். `நல்லா படிக்கிற பையன்.. இப்போ சுமாரான மார்க்தான் எடுத்திருக்கான்’ என்று ஆசிரியர்கள் பெற்றோர்களிடம் சொல்வார்கள். இதுதான் குழந்தை மன அழுத்தத்தில் சிக்கியிருப்பதற்கான ஆரம்ப அறிகுறி!

குழந்தைகள் மனநல மருத்துவத்தில், மன அழுத்தம், மனப்பதற்றம் இரண்டும் பொதுவானவை. இதில், ஓ.சி.டி எனும் `அப்செஸிவ் கம்பல்ஸிவ் டிஸ்ஆர்டர்’ (Obsessive compulsive disorder) இந்த மூன்றாவது டிஸ்ஆர்டர்தான் குழந்தைகளைத் தற்போது அதிகமாகப் பாதிக்கிறது. இந்தப் பாதிப்பு உள்ளவர்கள் ஒரு செயலையே திருப்பித் திருப்பிச் செய்வார்கள். வீடுகளில் பெண்கள் சிலர் சமையல் வேலை முடிந்ததும் கேஸை மூடிவிட்டோமா என்பதை ஒன்றுக்கு இரண்டுமுறை பரிசோதிப்பார்கள். இப்படிச் செய்வது சாதாரணமானதுதான். ஆனால், அதையே 15 அல்லது 20 முறை சோதித்துப் பார்த்தால் அதுதான் `அப்செஸிவ் கம்பல்ஸிவ் டிஸ்ஆர்டர்’. குழந்தைகளுக்கு வரும் `அப்செஸிவ் கம்பல்ஸிவ் டிஸ்ஆர்டர்’ என்பது செல்போனை திரும்ப திரும்ப எடுத்துப் பார்க்கத் தூண்டும். படிப்பதை மறந்துவிட்டு அதிலேயே மூழ்கியிருக்கச் செய்யும். செல்போனை எடுத்துப் பார்க்கவில்லையென்றால் ஒருவித மனப்பதற்றத்துக்கு ஆளாகிவிடுவார்கள். மேலும், பெற்றோர், உடன்பிறந்தோர் மீது கோபப்படுவும் சண்டையிடவும் செய்வார்கள்.



`கிளப்டோமேனியா’ (Kleptomania) என்பது நான்காவது வகை. இந்த வகையான குழந்தைகள் திருடுவார்கள். ஒரு சில குழந்தைகள் நல்ல குணம் படைத்தவர்களாக இருப்பார்கள். ஆனால், அவர்களுக்குப் பிடித்தமான ஒரு பொருள் இருந்தால், குறிப்பாக கையடக்கத் தொலைபேசியைப் பார்த்தால் பெற்றோர்களுக்குத் தெரியாமல் எடுத்து, அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்பார்கள். பிறகு அதை எங்கேயாவது போட்டுவிடுவார்கள். இந்த நான்குவகை காரணங்களால்தான் குழந்தைகள் அதிக மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். ஆகவே, குழந்தைகளிடமிருந்து கையடக்கத் தொலை பேசியை ஆரம்ப கட்டத்திலேயே பெற்றோர்கள் தள்ளிவைக்கவேண்டும். நிறைய வீடுகளில் குழந்தைகளின் குறும்புகளைச் சமாளிக்க அவர்கள் கையில் தொலைபேசியைத் திணிக்கிறார்கள். இது தவறான அணுமுறை. இதைத் தவிர்க்க வேண்டும். சமூகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை பெற்றோர்கள்தான் குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுக்கவேண்டும். குழந்தைகளோடு கதைப்பதற்கு நேரம் ஒதுக்கவேண்டும்.

பெரும்பாலான குடும்பங்களில் இருவரும் வேலைக்குச் செல்வதால், வீட்டுக்கு வந்ததும் டிவி பார்ப்பது, கையடக்கத் தொலைபேசியில் நண்பர்களிடம் கதைத்துக்கொண்டிருப்பது என அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். அன்று பாடசாலையில் என்ன நடந்தது என்று அரை மணி நேரம் ஒதுக்கி பிள்ளைகளிடம் உரையாடவேண்டும். 'பாடசாலையில் விழா நடக்கிறதா, உனக்கு எதுவும் வேண்டுமா?' என்றெல்லாம் கேட்டால், அந்தக் குழந்தை நிறைய சந்தோஷப்படும். குழந்தையின் வயதுக்கேற்றவாறு பொருள்களை வாங்கித் தரலாம். ஆனால், அவர்கள் ஆசைப்படுகிறார்கள் என்பதற்காக அவர்களுடைய வயதுக்குப் பொருந்தாத பொருள்களை வாங்கித் தருவதைத் தவிர்க்க வேண்டும். செல்போனை அவர்களிடம் தருவதாக இருந்தால், நீங்கள் பாஸ்வேர்டு போட்டு திறப்பதாக இருக்க வேண்டும். குறித்த நேரத்தில் சாப்பிடும் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். இவையெல்லாம் அவர்களுடைய மன அழுத்தத்தைப் போக்க உதவும்!”

## அறிவியல் ஆப்ஸ்!



போன்களிலுள்ள ஆப்ஸ்களை பொழுது போக்குக்கு மட்டுமல்ல ஆக்கப்பூர்வ செயல் பாடுகளுக்கும் பயன்படுத்தலாம் என்பதற்கு கீழேயுள்ள ஆப்ஸ்களே சாட்சி. பறவைகளை கண்காணிப்பது முதல் நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு உள்ளிட்டவற்றையும் கண்டுபிடித்து பிறரை காப்பது வரையில் இந்த ஆப்கள் உதவுகின்றன.

### EBIRD

கார்னெல் பறவைகள் ஆய்வகத்தின் ஆப் இது. இதில் உங்களது இடத்தை பதிவு செய்து நீங்கள் பார்க்கும் பறவைகளை புகைப்படம் எடுத்து பதிவு செய்யும் வசதி, பின்தொடரும் வசதி உண்டு. ஆ்ஃப்லைனிலுன் இயங்கும் என்பதால் இணையவசதி குறித்த கவலை வேண்டாம்.

### STAR WALK

வானிலுள்ள நட்சத்திரங்கள், சர்வதேச விண்வெளி மையத்தின் தகவல்கள் என ஏராளமான தகவல்களை இந்த ஆப் நமக்கு அள்ளித்தருகிறது.

### MYSHAKE

உலகில் நிகழும் நிலநடுக்கம் குறித்த தகவல்களை இந்த ஆப் வழங்குகிறது. இதன்மூலம் நமது நாடு, அருகிலுள்ள பாதிக்கப்பட்ட இடங்களைப் பற்றிய தகவல்களை துல்லியமாக அறிந்து பிறரையும் ஆபத்திலிருந்து காக்க உதவ முடியும்.

### NASA GLOBE OBSERVER

நிலம், பூமி குறித்த தகவல்களை அறிய நாசாவின் அப்சர்வர் ஆப் உதவுகிறது. உங்கள் இடத்தை பதிவு செய்துகொண்டால் செயற்கைக் கோள் மூலம் வானிலை உள்ளிட்ட தகவல்களை துல்லியதுலக்கமாக அறியலாம்.